விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 07 வியாழக்கிழமை (21.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

## ஐ.நா.ஆணையாளரின் அறிக்கையை ஏற்க இலங்கை மறுப்பு

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக சமர்ப்பித்த உத்தியோகபூர்வ அறிக்கையின் பெரும்பாலான விடயங்களை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட் 24

## தமிழர் பிரச்சினைகளை தீர்க்க அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

### ஐ.நாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை தீர்க்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தில் உள்ள விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக அறிக்கை 24

## குற்றமிழைத்தவர்களை தண்டனையிலிருந்து விடுவிப்பதால்

# சிறுபான்மையினருக்கு எதிர்காலத்தில் ஆபத்து

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எச்சரிக்கை

(ஜெனிவா)

தண்டனை விடுவிப்பு நிலை இலங்கையில் நீடிப்பதால் எதிர்காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு அது பாதகமாக அமையும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசலெட் அம்மையார் எச்சரித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.நா.அலுவலகத்தை இலங்கையில் அமைக்க முடியாது

### அரசு நிராகரிப்பு

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தை இலங்கையில் அமைக்கும் பரிந்துரையை இலங்கை அரசு 24

## மரண தண்டனை விவகாரம் மனித உரிமைகள் ஆணையாளர் கவலை

(ஜெனிவா)

இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார். 24

## சவேந்திர சில்வாவிற்கு இராணுவத்தில் உயர் பதவி

### ஐ.நாவில் அதிருப்தி

(ஜெனிவா)

சவேந்திர சில்வாவிற்கு இலங்கை இராணுவத்தில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளமை குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் 23

## சாரதி மீது வாள்வெட்டு

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வாடகைக் கார் சேவையில் ஈடுபடும் காரை மறித்து அதன் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 24

## போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை

### ஜெனிவாவில் அமைச்சர் திலக் மாரப்பன



(ஜெனிவா)

போர்க்குற்றச்சாட்டுக்களை நிராகரித்த இலங்கை அரசு, அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடரில் நேற்று இலங்கையின் 24

## தலைமன்னார் கடற்கரையில்

### 150 கிலோ கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் மேற்கு கடற்கரைப்பகுதியிலிருந்து சுமார் 150 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித் 24

## படகிலிருந்து தவறிவிழுந்த மண்டைதீவு இளைஞன் பலி

### நெடுந்தீவு கடற்பரப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

படகிலிருந்து தவறிவிழுந்த இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை வேளையில் நெடுந்தீவு கடற்கரையை அண்மித்த கடற்பிர 24



Aaruthal
ஆறுதலின் கற்றல் ஊக்கிகள்
எமது நிறுவனத்தினால் வெளியிடப்படும் தரம் 3 தொடக்கம் 11 வரையான கற்றல் ஊக்கிகள் இவ்வருடம் 2ஆம் தவணைக்கு வட மாகாண பாடசாலைகளுக்கு பாடசாலை ரீதியாக வழங்கப்படமாட்டாது.
ஆனால் விரும்புவோருக்கு வழங்கப்படும்.
விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் எழுத்து மூலம் 05.04.2019 திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.
ஆறுதல் - இல. 51, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. - 021 221 7092
மின்னஞ்சல் - aaruthaltrinco@gmail.com
சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர், ஆறுதல்
(C-5829)

## குறிப்பிட்ட கால அட்டவணையின் கீழ் விசாரணை பொறிமுறை அவசியம்

### ஜெனிவாவில் சர்வதேச நாடுகள் கோரிக்கை

(ஜெனிவா)

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற இலங்கை குறித்த அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றிய சர்வதேச நாடுகள், இலங்கையானது ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையின் கீழ் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. ஐரோப்பிய ஒன்றியம் பிரிட்டன் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சீரடி சாயி கோயில்
# திறப்பு விழா




சீரடி சாயி கோயில் திறப்பு விழா இன்று (21.03.2019) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஏழாலை தெற்கு சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள (ஜோதி மஹால்) இல்லத்தில் விசேஷ பூசை மற்றும் பஜனைகளுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அனைத்து பக்தர்களையும் வந்து சீரடி சாயி பாபாவின் அருள் ஆசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்ந்து வாராந்தம் வியாழக்கிழமைகளில் பூஜை, பஜனைகள் நடைபெறும்.

(8060) **- அடியவர்கள் -**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை கணித
ஆசிரியர்
திருமதி **பரமலட்சுமி பாலசந்திரன்**
அவர்களின் பாசமிகு தாயார்

## ஆறுமுகம் பார்வதி

**(களபூமி, காரைநகர்)**

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
யா/கோண்டாவில்
இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியு அழைப்பும்

தோற்றம்
1932 - 04 - 12



மறைவு
2019 - 02 - 19

## அமரர் வசந்தமலர் செல்வராஜா


பாசத்தின் பிறப்பிடமாய் அடக்கத்தின் ஊற்றாய்
அமைதியின் பிறப்பிடமாய் வேர் படர்ந்த விருட்சமாய்
சொந்தங்கள் புடைசூழ பரவசமாய் வாழ்ந்தவரே
அவனியிலே எமைத் தவிக்கவிட்டு நெடுந்தூரம் சென்றீரே
நெஞ்சில் வலியுடனும் நீங்காத நினைவுடனும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்

கடந்த 19.02.2019 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.472/2 கஸ்தூரியார் வீதி,**
**1ம் ஒழுங்கை.** (8056)

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர்**
## பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

**(தர்மகர்த்தா - திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தானம், மண்டைதீவு)**

**தோற்றம்: 14.10.1932** | **மறைவு:21.02.2019**

கடந்த 21.02.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்த **பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணம் 23.03.2019 நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

**குடும்பத்தினர்**
திருவெண்காடு, மண்டைதீவு - 6.
**021 221 4630**

(8058)

# சூடுபிடிக்கும் பிணைமுறி மோசடி விவகாரம்

# விசாரணைகளை விரைந்து முடிக்க இணக்கம்

## மங்கள பத்திரம்; மைத்திரி பணிப்புரை





(கொழும்பு)

**சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள தடயவியல் கணக்காய்வு விசாரணைகளை விரைந்து மேற்கொள்வதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கமைய தடயவியல் கணக்காய்வு விசாரணைகளை விரைந்து மேற்கொள்வதற்கு வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து வருவதற்கு சர்வதேச நிறுவனம் ஒன்றின் உதவியை பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தடயவியல் கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய மத்திய வங்கியும் தனது இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியது.

இதற்கமைய குறித்த தடயவியல் கணக்காய்வு விசாரணைகளுக்கு சர்வதேச நிபுணர்களை அழைப்பதற்கு சர்வதேச நிறுவனத்தின் உதவியை நாடுவதற்கும் விசாரணைகளை துரிதமாக மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை விரைந்து மேற்கொள்வதோடு குறித்த விசாரணைகள் தொடர்பான அறிக்கையை விரைந்து தனக்கு சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

---

## உயர்தரம் வரையில் கற்ற 7,500 பேருக்கு பயிற்சி செயற்றிட்ட உதவியாளர் நியமனம்

### பிரதமரின் பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

உயர்தரம் வரை கல்வி கற்ற 7,500 பேருக்கு பயிற்சி செயற்றிட்ட உதவியாளர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வருமாறு,

அபிவிருத்தித் திட்டங்களை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்காக அந்த அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கும் இணைப்பு நடவடிக்கைகளும் அத்தியாவசிய பணிகளாகவுள்ளன.

இதற்காக க.பொ.த.உயர்தரப் பரீட்சை வரையில் கல்வி கற்று தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் சமூகத்தை இணைத்துக் கொள்வதன் மூலம் அவர்களை தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் பங்குதாரர்களாக மாறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தேசிய கொள்கை பொருளாதார அலுவல்கள் மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி மற்றும் திறனாற்றல் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கு 7500 பயிற்சித்திட்ட உதவியாளர்களை இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோன்று தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு பயிற்சித் திட்ட உதவியாளர் பதவியில் நியமிப்பதற்கும் அவர்களுக்கு ரூபா 15,000 ஐ மாதாந்தம் செலுத்துவதற்கும் பிரதமர் மற்றும் தேசிய கொள்கை பொருளாதார அலுவல்கள் மீள்குடியமர்வு மற்றும் திறனாற்றல் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

---

## மைத்திரி மட்டுமே ஜனாதிபதி வேட்பாளர்

### சு.க.துமிந்த உறுதி

(நொச்சியாகம)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதில்லை எனத் தெரிவித்தால் மட்டுமே அதற்காக வேறு ஒரு வேட்பாளரை நியமிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



நொச்சியாகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

---

## போதைப்பொருள் பாவனை தொடர்பில் மருத்துவப் பரிசோதனைக்குத் தயார்

### முஜிபுர் அறிவிப்பு


போதைப்பொருள்பாவிப்பது தொடர்பாக யாராவது குற்றம் சாட்டினால் அது தொடர்பாக மருத்துவப் பரிசோதனைக்கு முகம் கொடுக்கத்தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். எமது சிறிய தவறுகளும் மக்கள் மத்தியில் பெரும் தவறாகவே தெரிகின்றன.

அதனால் நாங்கள் சரியாக இருந்தால் மக்கள் எங்களை மதிப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

## 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் பொலிஸாரால் கைது



10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை பூம்புகார் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞன் கஞ்சா பொதிகளை விற்பனைக்காகக் கொண்டு வந்த போதே, யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அவரை யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (இ-10-101)

---

## ஊழல் மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை 1142 முறைப்பாடுகள்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் இதுவரை 1142 முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதியிலிருந்து 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழுவால் முறைப்பாடுகளை ஏற்கும் காலம் நேற்று முன்தினம் மாலை 5 மணிவரை நிர்ணயிக்கப்பட்டிருந்ததாகக் குறித்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை கொஸ்கம, சாலவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களுக்கான நட்டஈடு வழங்கும் போது மதிப்பீட்டு அதிகாரிகள் தவறான மதிப்பீடுகளை மேற்கொண்டதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஒப்பமிடும் போது சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சர் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையின் வெற்றியை 'தடுத்தார்' தாஹிர்
# கேப்டவுனில் கோட்டைவிட்டது இலங்கை

தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் மோதிய முதலாவது 'ரி20' போட்டி சமனிலையானது. பின், 'சுப்பர் ஓவர்' முறையில் தென்னபிரிக்க அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் மோதிய முதலாவது 'ரி20' போட்டி கேப்டவுனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டுபிளசி, களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இலங்கை அணிக்கு நிரோஷன் டிக்வெல (0), குசால் மெண்டிஸ் (0) ஏமாற்றினர். அவிஷ்கா பெர்ணான்டோ (16), ஏஞ்சலோ பெரேரா (16) நிலைக்கவில்லை. கமிந்து மெண்டிஸ் (41) ஆறுதல் கொடுத்தார். திசர பெரேரா (19), தனஞ்செய டி சில்வா (14) சோபிக்கவில்லை.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்தது. உதான (12), அகில தனஞ்செய (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் பெலுக்வாயோ 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**குயின்ரன் ஏமாற்றம்**

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ரீசா ஹென்டிரிக்ஸ் (8), குயின்ரன் டி கொக் (13) ஏமாற்றினர். அணித் தலைவர் டுபிளசி (21), வான் டெர் டசன் (34), டேவிட் மில்லர் (41) ஓரளவு கைகொடுத்தனர். பெலுக்வாயோ (4), ரபாடா (0) சோபிக்கவில்லை.

**முடிவு சமன்**

கடைசி ஓவரில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இசுரு உதான வீசிய 20ஆவது ஓவரின் முதல் 4 பந்துகளில் 2 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. கடைசி 2 பந்துகளில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டநிலையில், 5வது பந்தில் 2ஆவது ஓட்டத்துக்கு ஓடிய டுமினி (9) ரன் அவுட்டானார். கடைசி பந்தில் இம்ரான் தாகிர் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்தார்.

20 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுக்க, போட்டி சமன் ஆனது. ஸ்ரெய்ன் (1), இம்ரான் தாகிர் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**'சுப்பர் ஓவர்'**

பின், 'சுப்பர் ஓவர்' முறையில் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டது. இதில் இரு அணிகளுக்கும் தலா ஒரு ஓவர் வழங்கப்பட்டது. மலிங்க 'வேகத்தில்' டேவிட் மில்லர் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடிக்க தென்னாபிரிக்க அணிக்கு ஒரு ஓவரில், 14 ஓட் டங்கள் கிடைத்தது. இம் ரான் தாகிர் 'சுழலில்' திணறிய இலங்கை அணிக்கு 5 ஓட்டங்கள் மட்டுமே கிடைக்க, தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.



சுப்பர் ஓவரில் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு வித்திட்ட ராஹிர்

# சகலகலா வல்லவன் தோனி
## குல்தீப் பாராட்டு



ஐ.பி.எல்., பயிற்சியின்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் தோனி

இந்தியாவுக்கு இரு உலக கிண்ணம் வென்ற 'நட்சத்திர நாயகன்' தோனியுடன் இணைந்து விளையாட வாய்ப்பு கிடைத்தது எங்களது அதிர்ஷ்டம்," என குல்தீப் யாதவ் தெரிவித் தார். இந்திய அணியின். 'சீனி யர்' விக்கெட் காப்பாளர் தோனி (வயது - 37).

"போட்டியின் சூழ்நிலையை பந்து வீச்சாளர்களை விட தோனி நன்றாகத் தெரிந்து வைத்திருப்பார்.

இந்திய அணிக்காக இரு உலக கிண்ணங்களை (2007ல் 'ரி20', 2011ல் ஒரு நாள்) வென்று கொடுத்தார். ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணியின் தலைவராக உள் ளார்.

இவரது தலைமையிலான சென்னை அணி 2010, 2011, 2018 என மூன்று முறை கிண்ணம் வென்று சாதித்தது. தோனி குறித்து இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர், ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடும் குல் தீப் யாதவ் கூறியதாவது.

பொதுவாக போட்டிகளின் போது சூழ்நிலையை சரியாக புரிந்து கொள்ள பந்து வீச்சாளர்களால்முடியாது. ஆனால் விக்கெட் காப்பாளராக இருப்பவர் சிறப்பாக தெரிந்து வைத்திருப்பார். 'சீனியர்' தோனி இவ் விடயத்தில் மிக கெட்டிக்காரர்.

அதிகப்படியான அனுபவம் பெற்றவர். பந்துவீச்சாளர்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பார். எந் தெந்த நேரத்தில் 'அட்வைஸ்' தேவை என தோனி நினைக்கின் றாரோ, உடனடியாக இதை பந்து வீச்சாளர்களிடம் தெரிவித்து விடுவார். இதுபோல விக்கெட் காப்பாளர்கள் அமையும் பட்சத்தில், எங்களைப் போன்ற பந்துவீச் சாளர்களுக்கு எளிதாக அமைந்து விடும்.

ஏனெனில் துடுப்பாட்ட வீரர்களைப் பொறுத்து சிறிய அளவிலான 'டிப்ஸ்' தருவார். இல்லையென்றால் நாங்களே அவரிடம் கேட்டு விடுவோம். உண்மையில் நானும், சகாலும் தோனியுடன் இணைந்து விளையாடுவது எங்களது அதிர்ஷ்டம் தான். ஏனெனில் ஸ்டம்புகளுக்கு அருகில் தோனிநிற்கும் போது பந்து வீச்சை மேற்கொள்வது எளிதாக உள்ளது.

வரும் உலக கிண்ணத் தொடரில் சாதித்து இந்தியாவுக்கு கிண்ணம் கொண்டு வர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆனால் மற்ற அணிகளுடன் ஒப்பிடும்போது, சொந்த மண்ணில் பங்கேற்கும் இங்கிலாந்து அணி கடும் சவாலாக இருக்கும்.

இவ்வாறு குல்தீப் யாதவ் கூறினார்.

**ஹோலி ஆதரவு**

குல்தீப் யாதவ் கூறுகையில், " இந்திய அணியின் 'சுழல்' மற்றும் 'வேகம்' என பந்துவீச்சாளர்களின் 'ஸ்ரைல்' குறித்து அணித் தலைவர் ஹோலி நன்கு தெரிந்து வைத்துள்ளார். இவர், எங்களுக்கு மட்டுமல்ல, அணியில் உள்ள அனைத்து இளம் வீரர்களுக்கும் ஆதரவாக இருப்பார்." என்றார்.


**வாடகைக்கு வீடு தேவை**

பருத்தித்துறையில் வியாபாரிமூலை, இன்பருட்டி, சக்கோட்டை, பொலிகண்டி பகுதியில் வாடகைக்கு வீடு தேவை. (C-5833)

தொ.பே: 077 168 1697





**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்தவரும் யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியருமான

**சுப்பிரமணியம் யசீலன்**

என்பவர் வவுனியா மாவட்ட நீதிபதி A.M **முஹமட் றியால்** முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக 26.02.2019ம் திகதி அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையை வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

*யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலை, வல்வெட்டித்துறை.*

(C-5830)



**வலம்புரி**

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் உப அதிபர் S. அமரசிவம் அவர்களின் அன்புத் தாயார்

**சீனியர் வள்ளிப்பிள்ளை**

அவர்கள் 19.03.2019 அன்று காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**அதிபர், ஆசிரியர்கள்**

யா/மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை, ஆனைக்கோட்டை.

(8059)

# தூய அரசியலுக்காக எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளத் தயார்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு



1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமூகப் புரட்சிக்கு அக்கால ஆணைக்குழு அறிக்கைகள் ஒரு காரணமாக இருந்தன. அத்துடன் எனது அரசியல் வாழ்விலும் அவை பங்களிப்புச் செலுத்தியதென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

மல்வத்து பீட மகாநாயக்க தேரர் மற்றும் உள்ளிட்ட மகாசங்க நாயக்கர்களால் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு "சாசன கீர்த்தி ஸ்ரீதேசாபிமானி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கண்டி மல்வத்து மகாவிகாரையில் இந்நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எனது வாழ்க்கையில் முக்கிய நாளாகக் கருதுகிறேன். 1994 இல் நான் அரசியலுக்குள் பிரவேசித்தேன். இலவசக் கல்வியை அனுபவித்த நான் நாட்டிற்கு சேவை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை மோதல்களின்றி, தூய அரசியலை செய்து வருகிறேன். இதுவே எனது கொள்கையாகும்.

எனது அரசியல் வாழ்வில் கட்டவுட், போஸ்டர் , பனர், பொலித்தீன் அலங்காரம் போன்ற எதையும் பயன்படுத்தாது அரசியல் செய்து ஓர் உதாரண புருசராக இருந்துள்ளேன். அந்த அடிப்படையில் எனக்கு ஆதரவு நல்கிய சகலருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தூய அரசியல் கரத்துடன் அரசியலுக்குள் பிரவேசித்த நான், வெளியேறும் போதும் அதே தூய்மையையே கடைப்பிடிப்பேன். நாட்டு மக்களுக்கு நீதி, நேர்மை, சட்டம்,ஒழுங்கு இவற்றை நிலை நிறுத்த எத்தகைய சவால்கள் வந்தாலும் ஏற்றுக்கொள்வேன். அதனூடாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

சுயாதீன அரச நிர்வாகத்தில், பொலிஸ் மற்றும் நீதிமன்றம் போன்றவற்றைப்பாதுகாக்கமுன்னிற்பேன். இளைஞர்களுக்கு நாட்டை ஒப்படைப்பதாயின் நாம் அதிகளவு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இயற்கையின் அருட்கொடையாகிய தூய்மையான சுற்றாடலைப் பாதுகாப்பது எமது கடமை. அது முக்கியமான ஒன்றாகும்.

சுதந்திரத்தின் முன் பிறந்தவன் என்றவகையில் இந்த நாட்டில் உள்ள பண்பாடுகள், மனிதநேயம் என்பன நாம் பெற்றுக்கொண்ட ஜனநாயகத் தன்மைகளாகும். அதனை புதிய தலைமுறையினருக்கு கொடுக்க வேண்டியுள்ளது. அதற்காக மதகுருமார்வழங்கிய ஆலோசனை, வழிகாட்டல்கள் முக்கியமானதாகும்.

இன்று மதகுருமார்களாகிய நீங்கள் எனக்கு வழங்கிய கௌரவத்தையும்நம்பிக்கையும் நான் தொடர்ந்து பாதுகாப்பேன். என்னால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தேசிய சமூக, சமய, கடமைகளை வெறுப் படையாது மேற்கொள்வேன்என்று கௌரவத்துடன் உறுதியளிக்கிறேன்.

நாட்டில் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய காலத்தில் மத குருமாராகிய உங்களது ஆலோசனைப்படி ஆட்சியி லிருந்த அரசுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு பலம் கிடைத் தது.

அது அரசியல் ரீதியாக எனக்கு சிறப்பாக இல்லா விட்டாலும் மனச்சாட்சிக்கு ஏற்ப நான்தொழிற்பட்டேன். அது கட்டாயம் நிறைவேற் றப்பட வேண்டிய தேசிய தேவையாகும் எனது வாழ் வில் இறுதி நேரம் முதல் அது பற்றி சிந்தித்து உளரீதியாக திருப்தி யடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி

## நவரத்தினம் வேலும்மயிலும்



எமது கலாசாலையில்
விரிவுரையாளராகக்
கடமையாற்றும்
**வேலும்மயிலும் சேந்தன்**
அவர்களின் அன்புத்
தந்தையார் **நவரத்தினம்
வேலும்மயிலும்** அவர்கள்
19.03.2019 அன்று காலமான
செய்தியறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8055)

**விரிவுரையாளர் கழகம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**


‘சர்வதேசத்தைப் புறக்கணிக்க முடியாது’

# ஜெனிவா பிரேரணைகளால் எந்தப் பாதிப்புமில்லை!

## அரச தரப்பு திட்டவட்டம்



(கொழும்பு)

ஜெனிவா மனிதவுரிமைப் பேரவை பிரேரணைகளால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என சபை முதல்வரும். அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் தொடர்பில் தற்போது பேசிவரும் எதிர்க்கட்சியினர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தான் அதி உயர் பதவியிலிருந்த இராணுவத் தளபதி சிறையிலடைக்கப் பட்டார் என்பதை உணர்ந்து பேச வேண்டும் என்றும் தெரிவித்தார். ஐ.நா. பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியுள்ளதை எதிர்ப்போர், நாட்டை மோ மான நிலைக்குத்தள்ளி சர்வதேச ரீதியாக நாடு புறக்கணிப்புக்குள்ளாகுவதற்கு வழிவகுத்த தமது செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் பொது தொழில் முயற்சிகள், டிஜிற்றல் தொழில்நுட்பம் சட்டம் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சுக்கள் மீதான நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு எதிராக சர்வதேசமும் செயற்பட்ட போது நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கிநாமே அந்த நிலைமையைச் சரி செய்தோம். அதற்காக காத்திரமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நேர்ந்தது.

ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான யோசனைகள் கடந்த மூன்று வருட காலமாக அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள்ள வரவேற்கும் விதமாகவே அமைந்துள்ளது.

நாம் சர்வதேசத்தைப் புறக்கணித்து செயற்பட முடியாது. சர்வதேசத்துடன் இணைந்த செயற்பாடுகள் எமது நாட்டுக்கு மிக அவசியமானது. இலங்கையின் இறைமை, பாதுகாப்பு, ஒருமைப்பாடு தொடர்பான செயற்பாடுகள் வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்பு,காணாமற்போனோர் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை அந்த ஆணைக் குழு வரவேற்றுள்ளதுடன் பாராட்டியுள்ளது.

அண்மையில் நாம் நடத்திய சர்வகட்சிக் கூட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறை புதிய தேர்தல்முறை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டாலும் மாகாண சபைகளை பலப்படுத்தும் வகையில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. அரசாங்கம் அதற்கிணங்கவே செயற்படுகின்றது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலவச மருத்துவ முகாம்

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 15 ஆவது சமூக நலத்திட்ட உதவியாக இலவச மருத்துவ முகாமும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை மன்றக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் குருதியில் கொழுப்பின் அளவுப் பரிசோதனை (Cholestrol), குருதியில் சக்கரை அளவுப் பரிசோதனை (Blood Sugar), சிறுநீரில்புரதம் வெளியேறுவதற்கான அளவைப் பரிசோதித்தல் என்பனவும், கண்ணில் குறைபாடு உடையவர்களுக்கு கண்களைப் பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் இடம்பெறும். (5)

## மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல விழா இன்று 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிமுதல் பஞ்சகுண்டத்துடன் கூடிய 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். மாலை உற்சவம் 5.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (இ)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்:** மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண் டிய நாள்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** நிதானதத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**கடகம்:** காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியயப்படுவார்கள், புதிய முயற்சிகள் கைகூடும், குடும்ப ஒற்றுமை கூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டியநாள்.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கிரகநிலை:** சூரி, செவ், ராகு, புத, சுக், சனி, குரு, கேது, சந்


சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

**21.03.2019**
பங்குனி 07, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
பூரணை காலை 7.45 மணிவரை
பிரதமை பின்னிரவு 5.44 மணிவரை
உத்தரம் பிற்பகல் 2.25 மணிவரை
சுபநேரம் 7.47-9.17 மணிவரை
இராகுகாலம் 1.47-3.17 மணிவரை
பங்குனி உத்தரம்

வளவன்



ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் பஞ்சரத பவனி நேற்றுக் காலை வெகு விமர்சையாக இடம்பெற்றது.



யாழ்ப்பாணம்-நல்லூர் சட்டநாதர் ஆலய சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக இடம் பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# முன்பள்ளிக்காணி விவகாரம் ம.உ.ஆணைக்குழுவில் புகார்

(யாழ்ப்பாணம்)

30 வருடகாலமாக முன்பள்ளிச் செயற்பாட்டின் கீழ் இருந்த காணியை அரச காணி அனுமதிப் பத்திரம் மூலம் தனியார் ஒருவருக்கு கோப்பாய் பிரதேச செயலகம் வழங்கியமைக்கு எதிராக கடந்த 18 ஆம் திகதி யோகபுர மாதர் அபிவிருத்திச் சங்கம் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஜே/265 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள யோகபுரம் சின்மன மருது முன்பள்ளி தனது கல்விச் செயற்பாட்டிற்காக பயன்படுத்திய காணியே இவ்வாறு தனியார் ஒருவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் யோகபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கருத்துத் தெரிவிக்கும் போது கடந்த 30 வருடங்களாக என்.ஈ.பி.பி.எஸ்.ஜே/PS/J/J/82 என்.பி/14/4(13) S/O 396 எனும் பதிவிலக்கமுடைய முன்பள்ளிச் செயற்பாட்டில் உள்ள காணியை தனிநபர் ஒருவர் அனுமதிப்பத்திரம் மூலம் தனக்குரிய காணி என உரிமை கொண்டாடுகிறார்.

குறித்த விடயம் தொடர்பில் கடந்த மாதம் 03 ஆம் திகதி பொறுப்பிலிருந்த கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலருக்கு அறிவித்தும் எவ்விதமான தீர்வும் கிடைக்கவில்லை.

எனவே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறாக கோப்பாய் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட காணியை முன்பள்ளிச் சிறார்களின் தேவைக்கு மீண்டும் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்வைப் பெற்றுத் தருமாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டபோது முன்பு கடமையில் இருந்த செயலாளர் அனுமதியுடன் குறித்த நபருக்கு காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (5-10)

# கொட்டடி சனசமூக நிலையத்தின் 70வது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவை ஒட்டி கிராம அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து புத்தாண்டு விழா நிகழ்வுகள் கொட்டடி சனசமூக நிலைய எல்லைக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குமான எல்லைக்குட்பட்ட மக்களுக்காக இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் சிறுவர், இளைஞர், முதியோர், சான்றோர் ஆகியோருக்கான பலதரப்பட்ட நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

இதில் பங்கு கொள்ள விரும்புவோர் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றார்கள். சமூக மட்டத்தில் சேவையாற்றி கௌரவம் பெற்றவர்களுக்கு சமூகத் திலகம் என்னும் பட்டமும் வழங்கப்படவுள்ளது.

மற்றும் முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, பலூன் ஊதி உடைத்தல், போத் தலில் தண்ணீர் நிரப்புதல், மெது வான சைக்கிள் ஓட்டப் போட்டி, தடை தாண்டல் ஓட்டம், தேங் காய் திருவுதல், கயிறு இழுத்தல், தாச்சி மறித்தல் எனப் பல நிகழ் வுகள் உள்ளதால் இந் நிகழ் வுகளில் பங்குபற்ற விரும்புவோர் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துமாறு நிலைய நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இம்மாத முடிவுக்குள் விண்ணப்பங்கள் கையளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# கந்தர்மடத்தில் ஆட்டோ விபத்து

யாழ்.கந்தர்மடப்பகுதியில் இரு ஆட்டோக்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒரு ஆட்டோ தப்பிச் சென்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் கந்தர்மடப் பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு நல்லூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆட்டோவின் எதிரே வந்த ஆட்டோ கிளை வீதியால் செல்ல முற்பட்ட வேளை விபத் துக்குள்ளாகியதில் விபத்து ஏற்படுத்திய ஆட்டோ தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சி.சி.ரி.வி காணொலி மூலம் விபத்தை ஏற்படுத்திய ஆட்டோவை அடையாளம் காணுவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (5-10)

# யாழ்.பெரியகடை மாதர் சங்கத் தலைவி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

கொழும்பு இந்து மகளிர் அமைப்பினரால் கடந்த 16 ஆம் திகதி சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றது.

இதில் சிறந்த செயற்பாட்டிற்கான சங்கங்களாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சியைச் சேர்ந்த மூன்று சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அதன் தலைவிகளுக்கு கௌரவிப்பும் சங்கத்திற்கு நிதியுதவியும் வழங்கப்பட்டன.

இந்த வகையில் யாழ். பெரிய கடை மாதர் அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு அதன் தலைவி திருமதி வரதராஜன் சசிரேகா கௌரவிக்கப்பட்டு சங்கத்திற்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. (5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சிச் சங்கத்தின் 15ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சாவகச்சேரியிலமைந்துள்ள தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் லயன் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு கலந்து கொள்வார்.

புதிய செயற்குழு தெரிவும் ஓய்வூதியர் கௌரவிப்பும் இடம்பெற உள்ளதாக தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (5-29)

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேசப் பிரிவு பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலாளர் சா.சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக கணக்காளர் சூ.ஈகிலன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பாலசுப்பிரமணியம், விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் மேழியூர் கரங்கன் அமைப்பு வடமராட்சி அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்விகற்கும் 46 மாணவர்களுக்கான பால் அருந்தும் கோப்பைகள், அப்பியாச கொப்பிகள், விளையாட்டு உபகரங்கள் என்பன கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் வழங்கப்பட்டன.

சித்திரமேழியூர் கிராமத்தவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். (5-104)

# காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன? அரசு கண்டறிய வேண்டும்- சாள்ஸ் எம்.பி.

## 'மறப்போம், மன்னிப்போம்' கூற்றுக்கும் கண்டனம்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக்கூடியதாய் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கை, 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த போது, பிரித்தானியா தவறிழைத்துவிட்டதென, பிரித்தானியாவுக்கு எதிராகக் கையை நீட்டினார்.

யார், யார் பாதிக்கப்பட்டுள்ளனரோ, அவர்களுக்குத் தான் வலி தெரியும். அவ்வாறானவர்களுக்குத் தான் அதன் பெறுமதி தெரியும். இந்நிலையில், கிளிநொச்சியில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "மறப்போம்", "மன்னிப்போம்" எனக் கூறியுள்ளார். அதனை, வன்மையாக நான் கண்டிக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானத்தின் ஊடாகவே, இலங்கையில் என்ன நடந்ததென்பதை அறிந்துகொள்ள முடியும். சர்வதேச நீதிமன்றத்தை நிறுவி, சர்வதேச நீதிபதிகளை கொண்டு வந்து விசாரணைக்கு உட்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், என்ன நடந்ததென்பதை இந்த அரசாங்கத்தின் நிறுவனம் கண்டறியாது என்பது எனது கருத்தாகும் என்றார்.

ஐ.நா, அழுத்தத்தால், இந்த அரசாங்கம் தீர்மானமொன்றை எடுக்கவேண்டும். தீர்மானமும் அவ்வாறானதாகவே இருக்கவேண்டும். ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு, பிரித்தானியா யோசனையொன்றை கொண்டு வந்திருக்கின்றது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். எனினும், அதனூடாக, இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தமிழ் மக்களின் வடக்கு-கிழக்கு பிரதேசத்தை தனி அலகாக, பிரித்தானியா 1948 ஆம் ஆண்டே சட்டவரைபை செய்திருந்தால், தமிழர்கள் அடக்கப்பட்டிருக்க மாட்டார்கள், யுத்தம் இடம்பெற்றிருக்காது, யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றிருக்காது, 10 வருடங்களுக்குப் பின்னர், இவ்வாறானதொரு பிரேரணையை கொண்டு வந்திருக்கும் தேவையும் ஏற்பட்டிருக்காது என்றார்.

ஐ.நாவுக்கு பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்தும் சென்றுள்ளனர். அரசாங்க பிரதிநிதிகளும் சென்றிருக்கின்றனர். இந்நிலையில், அவற்றை குழப்புவதற்கென்றே ஒரு குழுவொன்றும் சென்றிருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

1948ஆம் ஆண்டு சுதந்திரத்தை கொடுத்தபோது, பிரித்தானிய அரசாங்கம் தமிழர்களுக்கு உரிய சரியான தீர்வை வழங்கியிருந்தால், இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. அவ்வாறு சரியான தீர்வை எடுக்காததன் காரணத்தினால் தான் பிரச்சினைகள், சிக்கலுக்கு எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபாயை கொடுத்துவிடுவதன் ஊடாக, பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அரசாங்கம் கண்டறியவேண்டும். யார், யாருக்கு வலி இருக்கின்றதோ? அவர்களுக்குத் தான் பெறுமதி தெரியும். அவர்கள், இருக்கின்றார்களா? இல்லையா? என்பது பிரச்சினை இல்லை. என்ன நடந்தது என்பதற்கு சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக தீர்வை காண்பதற்கு வழிசமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:பரணி 4<br>கி.பா:63செவ் 1 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L, காசாளர்(தனியார்)<br>எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்<br>தொ.இ: B/1138 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 2<br>கி.பா: 84சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச்,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/3138 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 4<br>கி.பா: 13 ¼செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L, France<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுPRமட்டும்<br>தொ.இ: B/1150 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 3<br>கி.பா: 64செவ் இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc, வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/3140 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 94செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்A/L, சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/1156 | பிறப்பு: 1976 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: மனைவியை இழந்தவர்கள், விவாகரத்தானவர்கள் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/3169 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 3<br>கி.பா: 35சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L, அரச பேருந்து நடத்துநர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/1158 | பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L, வரவேற்பாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில், வெளிநாடு<br>தொ.இ: G/3230 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# மனிதவுரிமைகளை ஊக்குவிக்க அரசு தொடர்ந்தும் செயற்படும்

## மகிந்தவுக்கு மங்கள பதில்

(கொழும்பு)

நல்லிணக்கம் மற்றும் மனிதவுரிமைகளை ஊக்குவிக்கவும் பாதுகாப்பதற்குமான தனது கடப்பாட்டை மீளுறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் தனது இறைமையைப் பாதுகாக்கத் தொடர்ந்து செயற்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலங்கையில் அனைத்து தேவைகளினதும் அடிப்படையில் அமைந்த இது போன்ற சந்தர்ப்பங்களின் போது நாடுகள் எவ்வாறான நிலையில் இருந்தனவோ அவ்வாறான நாடுகளில் உள்ள நிபுணர்களின் கூட் டுறவுடன் தேசிய முறைமை ஊடாக அரசாங்கம் நீதியை உறுதிப்படுத்தும் என்றும் மங்கள தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பான நாட்டின் முன் னேற்றம் பற்றி ஐ. நா. மனித உரிமை பேரவை நிலைப்பாடு குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை தொட ர்பாக கருத்து தெரிவித்த போதே நிதி அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண் டவாறு தெரிவித்தார்.

மக்களை திசை திருப் பும் வகையில் அறிக்கை விடுத்துள்ள முன்னாள் ஜனாதிபதி தான் இப்போது ஜனா திபதியும் அல்ல குறைந்தபட் சம் பிரதமருமல்ல என்பதை மறந்து விட்டார் போலும். ஆனால் நாட்டு மக்கள் அதை எளிதில் மறக்க மாட்டார்கள்.

ஒக்டோபர் 26 ஆம் திகதி நாட்டின் பொருளாதாரத்தை அதள பாதாளத்துக்கு இட்டுச் சென்றவர்களின் முயற்சி களை தொடர இடமளிக்கக் கூடாது. எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு பங்கம் விளை விக்க இடமளிக்கக் கூடாது என்று கூறிய நிதி அமை ச்சர் நல்லிணக்கத்துக்கான எமது பயணம் தொடரும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# இஸ்ரேலில் துப்பாக்கிச்சூடு; இரண்டு பாலஸ்தீனர்கள் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய படைகளால் இரு பாலஸ்தீன இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

வெஸ்ட்பாங் பகுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற மோதலின் போதே 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும் பாலஸ்தீனத்திற்கு அருகில் உள்ள மத ஸ்தலத்திற்கு வந்தபோது, துருப்புக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இஸ்ரேலிய படைகள் தெரிவித்துள்ளன. (7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. பரஞ்சோதி கோபிராஜ்



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் சக ஆசிரியர் **திரு. பரஞ்சோதி கோபிராஜ்** அவர்கள் 18.03.2019 அன்று கிளிநொச்சி நீதிவான் நீதி மன்றத்தில் நீதிபதி திரு.மா.கணேசராசா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவிப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரை மனதார வாழ்த்தி மேலும் பல பதவிகளை பெற்று மக்கள் பணி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

D10, உருத்திரபுரம், கிளிநொச்சி.

வாழ்த்துவோர்:
ஆசிரிய நலன்புரிச் சங்கம்
கிளி/உருத்திரபுரம்.ம.வி.

(8050)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. முருகேசு கஜகுமார் (B.Sc,PGDE)



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் சக ஆசிரியர் **திரு. முருகேசு கஜகுமார்** அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் 22.01.2019 அன்று இடம்பெற்ற 34 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பெற்றமையை உளமார வாழ்த்தி தொடர்ந்தும் பல பட்டங்கள் பெற மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.


D10, உருத்திரபுரம், கிளிநொச்சி.

வாழ்த்துவோர்:
ஆசிரிய நலன்புரிச் சங்கம்
கிளி/உருத்திரபுரம்.ம.வி.

(8050)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2019 முதல் 13.04.2019 வரை



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது உங்கள் இராசிநாதன் குரு. இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். அதுமட்டுமல்லாமல் குருவின் பார்வை செவ்வாய் மீதும் பதியும் விதத்தில் மாதத் தொடக்கம் உள்ளது. எனவே, குருமங்கள யோகமும் குருச்சந்திர யோகமும் உருவாகின்றது. மேலும், உங்கள் இராசியிலேயே தனாதிபதி சனியும் கேதுவும் வீற்றிருக்கின்றார்கள். எனவே, இதுவரை ஏற்பட்ட கவலைகள் எல்லாம் மாறும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் இனிதே நடைபெறும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

முல்லைப் பூ பிரியரான குரு ஒருவர்தான் நவக்கிரகங்களில் சுபக்கிரகம் ஆவார். அப்படிப்பட்ட சுபக்கிரகம் உங்கள் இராசியிலேயே இருக்கும்பொழுது சுபச்செய்திகள் உங்களுக்கு வந்த வண்ணமாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் வந்த பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் இதுவரை தேங்கியிருக்கலாம். அவை, இனி சுறுசுறுப்பாக நடைபெறத் தொடங்கும். கொடுக்கல்-வாங்கல்களில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். சமூக அளவில் பிரபலமாக உள்ள முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடிவந்து முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்துக் கொடுப்பார்கள்.

ஊர்மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஜென்ம சனியின் ஆதிக்கம் இருப்பதால் வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வதுதான் நல்லது. அரசியலில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் தேடி வரும். புதிய பாதை புலப்படும். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

## நல்ல நேரம் வந்து விட்டது!

கல்வி சம்பந்தமாக மேற்படிப்புக்கோ, உத்தியோக முன்னேற்றம் கருதியோ வெளிநாடு செல்ல விரும்பியவர்களுக்கு இது உகந்த நேரமாகும். அங்கேயே வேலை கிடைத்து திருப்தியடையும் சூழ்நிலையும் கூட ஒரு சிலருக்கு உருவாகும்.

பெயர்ச்சியான கேது இப்பொழுது உங்கள் இராசியில் சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் ராகு இருக்கின்றார். கால சர்ப்ப தோஷம் உருவாகின்றது. எனவே, வெற்றிப்பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்க சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோக பலம் பெற்ற அனுகூல ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது. பங்குனி உத்திர நாளில் தங்க ரதம் ஏறி பவனி வரும் முருகப் பெருமானை முறையாக வழிபட்டால் தங்கு தடைகள் அகலும். தன வரவு திருப்தி தரும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் ஒவ்வொன்றாக நடைபெறும்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

மார்ச் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இதன் விளைவாக உத்தியோக முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். பணி நிரந்தரம் ஆகாதவர்களுக்கு இப்பொழுது பணி நிரந்தரமாகி மகிழ்ச்சி தரும். வர வேண்டிய சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேரும். பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட மீண்டும் வந்து பதவியில் வந்து சேரும் வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட இடையூறுகள் தானாகவே அகலும். எதிர்காலத்தைப் பற்றிய கவலைகள் அகலும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

கும்ப இராசிக்கு இம்மாதம் 22 ஆம் திகதி சுக்கிரன் வருகின்றார். இதன் விளைவாக உங்கள் இராசிக்கு 3 ஆம் இடம் புனிதமடைகிறது. அந்த இடம் வெற்றியை குறிப்பிடும் இடமாகவும் சகாய ஸ்தான்மாகவும் அமைந்து சுக்கிரன் சஞ்சரிப்பதால் பெண் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகுவதற்கான சூழல்கள் உருவாகும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். சகோதரர்கள் சமாதானக் கொடி பிடித்து நிற்பதுடன் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாகவும் இருப்பர். நிழல்போல தொடர்ந்த கடன் சுமை குறையும். செல்லும் இடங்களில் எல்லாம் உங்கள் செல்வாக்கு உயரும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்லவிதமாக நடைபெறும். வாங்கி கொடுத்த தொகையும் வந்து சேரும். பாசம் மிக்கவர்கள் உங்களுக்கு பக்க பலமாக இருப்பார்கள்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7,10 என்ற கேந்திர ஸ்தானங்களுக்கு அதிபதியானவர் புதன். அப்படிப்பட்ட கேந்திராதிபத்திய தோஷம் பெற்றவரான புதன் இப்பொழுது நீச்சம் பெறுவது ஒருவகையில் உங்களுக்கு யோகம்தான். அதாவது, 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப நீங்கள் திட்டம் எதுவும் போடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்போடு விரும்பிய காரியங்கள் சிறப்பாக நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். வாரிசுகளின் முன்னேற்றம் கண்டு நீங்களே பெருமைப்படுவீர்கள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகன்று மகிழ்ச்சி நிலவும்.




இம்மாதத்தில் வரும் வியாழக்கிழமைகளில் குருவையும் சனிக்கிழமைகளில் சனியையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் நம்பிக்கைகள் யாவும் நிறைவேறும். குருவின் சஞ்சாரத்தால் இந்த மாதம் சிறப்பாக அமையும். தனவரவு திருப்திதரும். கணவன்-மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

பிள்ளைகளுக்கான மங்கல நிகழ்ச்சிகள், எதிர்பார்த்தபடி நடைபெறும். உடன் பிறப்புகள் பாசமழை பொழிவர். தாய்வழி ஆதரவு கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வெளிநாட்டில் பணிபுரிய அழைப்புகள் வரலாம்.

பணி புரிபவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். ஊதிய உயர்வும் கிடைக்கும். உறவினர் பகை மாறும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானை வழிபடுவதோடு, ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவையும் வழிபடுவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது விரய ஸ்தானம் மிகவும் வலுப்பெற்றிருக்கின்றது. விரயாதிபதி வியாழன் விரய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு உங்கள் இராசிநாதன் சனியும் சஞ்சரிக்கின்றார். மேலும், தற்சமயம் பெயர்ச்சியான கேதுவும் விரய ஸ்தானத்திலேயே இருக்கின்றார். இவ்வாறு அதிக பலம் வாய்ந்த கிரகங்கள் அனைத்தும் 12 இல் ஒன்றுகூடி இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். காலையில் ஓரிடத்திலும் மதியம் ஓரிடத்திலும் மாலை ஓரிடத்திலும் பயணிக்கும் சூழ்நிலை உருவாகும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.

இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் எதிர்பாராத விதமாக வந்து சேரலாம். உத்தியோக மாற்றங்களும் உறுதியாகலாம். எதையும் தீர்க்கமாக முடிவெடுக்க முடியாமல் போகும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவு கூடும். பிறருக்குப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் உருவாகலாம். கோபத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது. 4 இல் சஞ்சரிக்கும் செவ்வாயை, குரு பார்ப்பதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். உங்களுக்கோ, உங்களைச் சார்ந்தவர்களுக்கோ இதுவரை திருமணம் பேசி முடிவடையாமல் இருந்தால் இப்பொழுது அது முடிவடையும்.

பிள்ளைகளின் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லும் யோகம் உருவாகும். கடமையைச் சரிவரச் செய்ய முடியாமல் குறுக்கீடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். நிலைமையைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

## விரயங்கள் அதிகரிக்கும்!

6 இல் இராகு இருப்பதால் பண வரவிற்கு பஞ்சம் ஏற்படாது என்றாலும் கூட ஒரு மடங்கு வரவு வந்தால், இரு மடங்கு செலவு உருவாகும். முன்னோர் கட்டி வைத்த ஆலயங்களை முறையாகப் பராமரிக்க முன்வருவீர்கள். ஆன்மீகப் பணிகளுக்கு அதிகமாகச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

தல வழிபாடுகளையும் தீர்த்த யாத்திரைகளையும் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஏழரைச் சனியில் இப்பொழுது விரயச் சனி நடைபெறுவதால் அது விலகும் வரை சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. திசாபுத்தி பலம் இல்லாதவர்களுக்கு யோக முன்னேற்றம் கருதி, கணவன் ஒரு இடத்திலும் மனைவி ஒரு இடத்திலும் வேலை பார்க்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வந்து சேர்ந்தாலும் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் தத்தளிப்பீர்கள். சிக்கல்களிலிருந்து விடுபட இந்த மாதம் தெய்வ தரிசனங்களை மேற்கொள்ளும் பொழுது பங்குனி உத்திர நாளில் வள்ளி மணவாளப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 5 ஆம் இடத்திற்கு மார்ச் 20 ஆம் திகதி செல்கின்றார். புத்திர ஸ்தானம் வலுப்பெறுவதால் பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகின்றது. குறிப்பாக அவர்களின் உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் ஏதேனும் முயற்சி செய்திருந்தால், அதில் வெற்றி கிடைக்கும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும் வாய்ப்பும் உண்டு. பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். சகோதரர்கள் நட்புடன் நடந்து கொள்வர். கடன் சுமை குறையும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5.10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் மார்ச் 28 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். தொழில் ஸ்தானாதிபதி, தன ஸ்தானத்திற்கு வரும்பொழுது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். பணி புரியும் இடத்தில் இருந்த பதற்ற நிலை மாறும். கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். திருமண வயது வந்த பிள்ளைகளுக்கு வரன்கள் வாயில் தேடி வரும். திருமண நிகழ்வுக்கான சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பொதுவாக, இக்காலத்தில் செய்யும் முயற்சிகள் கைகூடும். சுக்கிரன் புதனோடு இணைந்து சஞ்சரிப்பதால் மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.




**நீச்ச புதனின் சஞ்சாரம்**

ஏப்ரல் 8 ஆம் திகதி தனது நீச்ச வீடான மீன இராசிக்குப் புதன் செல்கின்றார். வலிமை இழந்த புதன் உங்களுக்கு நன்மைகளையே அதிகம் செய்வார். காரணம் 6 இற்கு அதிபதியானவர் புதன். அதேநேரம் 9 ஆம் இடத்திற்கும் அவர் அதிபதியாவதால் பெற்றோர் வழியில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உற்றார், உறவினர்கள் உங்கள் எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமல் மனக் கவலை அடைய வைப்பர். பத்திரப் பதிவில் தடைகள் ஏற்படலாம். பங்காளிப் பகை அதிகரிக்கும். உறவினர்களுக்கு நீங்கள் நன்மை செய்யப் போய் அது தீமையில் முடியலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் முற்பகுதியில் செலவுகள் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் தடுமாற்றம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் பிரச்சினைகள் நல்ல படியாக முடியும். குடும்ப உறுப்பினர்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர். கணவன்-மனைவி இடையே பாசமும் நேசமும் கூடும். பணிபுரியும் இடத்தில் பிரச்சினை அகலும். வீண்பழிக்கு ஆளாகாமல் முன்எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. பிள்ளைகளை கண்காணிப்பில் வைத்துக் கொள்ளுங்கள். தாய் மற்றும் சகோதர ஆதரவு திருப்தி தரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு. சம்பளப் பாக்கிகள் வசூலாவதில் தடை ஏற்பட்டாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆனைமுகப் பெருமான் வழிபாடும் சனி பகவான் வழிபாடும் அல்லல்களை அகற்றும்.

(தொடரும்)

# விமானக் கொள்வனவுக்கு எதிர்ப்பு

# அமைச்சரவையில் மைத்திரி சீற்றம்

## மல்லுக்கட்டிய மங்கள

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்கு விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பு வெளியிட்டதால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை விமானப்படைக்கு விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.


அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

அப்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த நான்கு ஆண்டுகளில் விமானப்படை மற்றும் கடற்படைக்கான விமானங்கள் மற்றும் கப்பல்களைக் கொள்வனவு செய்ய முயன்ற போதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், அவற்றைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார்.

அத்துடன் விமானங்கள், கப்பல்களின் வெற்றிடத்தை மீள நிரப்புவதற்கான, பரிந்துரைகளைச்செய்வதற்கு, குழுவொன்றை அமைக்குமாறும், ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர, விமானப்படைக்கு வாங்கவுள்ள விமானம், 40 ஆண்டுகள் பழைமையானது என்பதால் தான் நிதி அமைச்சு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கூறியுள்ளார். (இ-7)

# விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



(இலுப்பைப்படிச்சேனை)

மட்டக்களப்பு உறுகாமக் குளத்திலிருந்து வயல் நிலங்களுக்கு நீர்பாய்ச்சல் செய்யப்பட்டு வந்த வாய்க்காலை இடைமறித்து சங்குளக்குளம் கட்டப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் இலுப்படிச்சேனை பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை விவசாயிகளினால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது தமது கோரிக்கைகள் அடங்கிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிதாக சங்குளக்குளம் கட்டப்பட்ட நீர்ப்பாசனத்திற்காக சிறிய குழாய்கள் மாத்திரம் பொருத்தப்பட்டுள்ளதால் பழவெட்டான், தளவாய், பாலகன்வெளி, கூமாச்சோலை, தம்பானம்வெளி மற்றும் கயிருவெளி ஆகிய பகுதிகளிலுள்ள வயல்நிலங்களுக்கு போதியளவு நீர் கிடைப்பதில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதன் காரணமாக சுமார் 3500 ஏக்கர் வயல் நிலங்களுக்கான நீர்ப்பாசனம் தடைப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கைக்குப் பாதகமாக அமையும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை

## பிரான்ஸ் தூதுவர் கூறுகிறார்

(கண்டி)

சிங்கள மன்னர்கள் காலம் முதல் பல நூற்றாண்டுகளாக இலங்கைக்கும் பிரான்சுக்குமிடையே மிக நெருக்கமான தொடர்புகள் காணப்படுவதாகவும் எந்தவகையிலும் இலங்கைக்குப் பாதகமாக அமையும் விதத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவெர்த் தெரிவித்தார்.



அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கத் தேரர் வண. வரகாகொட ஞானரத்ன தேரரை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதுவித நிகழ்ச்சி நிரலுக்கும் அப்பால் அனுபவரீதியாகவே இலங்கை விடயங்களில் தமது நாடு கையாள்வதாகவும், இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக பிரான்ஸ் பாரிய ஒத்துழைப்பை வழங்க முன் வருவதாகவும் மாத்தளை மாவட்டத்தில் குளங்களை புனரமைப்பதற்கு உதவியதன் மூலம் விவசாயத்துறை அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்புகளைச் செய்துள்ளதாகவும் தூதுவர் கூறினார்.

கண்டியிலுள்ள தொல்பொருள் இடங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் தமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அதன் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

யுனெஸ்கோ அமைப்பால் உலக மரபுரிமையாக கண்டி நகர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் அதன் வனப்பும் வரலாற்று பாரம்பரியங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

பிரான்ஸ் நாட்டை அபிவிருத்தி செய்யும் போது நாட்டு மக்கள் பல்வேறு தியாகங்களைச் செய்தனர். அதன் பிரதிபலனாக இன்று பிரான்ஸில் வாகன நெரிசல் குறைந்து விட்டது. அநேகமான மக்கள் பொது போக்குவரத்து வசதிகளான புகையிரத சேவை, பேருந்துச் சேவை என்பவற்றையே பயன்படுத்தி வருகின்றனர். கண்டி நகரிலும் அதே விதமாக தியாகங்களுக்கு மத்தியில் தொழிற்பட்டால் காலப் போக்கில் அபிவிருத்தி அடிப்படையில் நன்மையடைய முடியும். சில அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக நாம் அரசிற்கு ஆலோசனை வழங்கியுள்ளோம். முறையான தலைமைத்துவம் மூலம் அவற்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கடன் சுமையைக் குறைத்து

# கையிருப்பிலுள்ள நிதியை அதிகரிக்க வேண்டியுள்ளது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமகால அரசாங்கம் வரலாற்றில் எந்தவொரு அரசாங்கத்தைப் போல் அல்லாமல் கிராமத்தையும் வணக்கஸ்தலங்களையும் அபிவிருத்தி செய்ய நேரடியாகப் பாடுபட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் சுமையைக் குறைத்து, கையிருப்பிலுள்ள நிதியை அதிகரிக்க வேண்டியுள்ளது. கிராமங்களை முன்னேற்ற வேண்டியுள்ளது. இந்த முயற்சியில் வணக்கஸ்தலங்கள் மறக்கப்படமாட்டாது என பிரதமர் தெரிவித்தார்.

வணக்கஸ்தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் பெருமளவு நிதியை வழங்குவதாகவும் தெரிவித்தார். கெக்கிராவை ஸ்ரீ தேவதிஸ்ஸ ரஜ மஹா விகாரையில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் தொடர்பான சட்ட திட்டங்களில் குறைபாடு

## கர்தினால் கவலை



(கொழும்பு)

போதைப்பொருள் தொடர்பிலான நடவடிக்கைகளின் போது இந்நாட்டின் சட்ட திட்டங்களில் குறைபாடு நிலவுவதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து போதைப் பொருளை ஒழிப்பதற்கு அதிகாரிகள் முழு வீச்சுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 31 ஆம் திகதி போதைப்பொருள் தொடர்பிலான விழிப்புணர்வு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தகவலறியும் சட்டத்தினூடாக தனிப்பட்ட விடயங்களை அறிய முற்படக்கூடாது

## எரான் விக்கிரமரத்ன விளக்கம்



(கொழும்பு)

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக ஒருவரின் தனிப்பட்ட விடயங்களையோ அல்லது அந்தரங்கங்களை அறிந்து கொள்ள அனுமதிக்கக் கூடாதென நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அத்துடன் வருமான வரி செலுத்தும் விடயத்தை ஒன்லைனுக்கு மாற்றவேண்டும். இதன்மூலம் அதிகாரிகளுடனான வருமான வரி செலுத்துவோரின் சந்திப்புக்கள் இல்லாமல் போவதனால் மோசடிகள், இலஞ்சங்கள், திருட்டுக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழருக்காக இறுதிவரை உழைத்த எம்.ஜி. ஆரின் 102 ஆவது பிறந்த நாள் நிகழ்வும் மாணவர்களுக்கான, கலைஞர்களுக்கான, விளையாட்டு வீரர்களுக்கான மனித நேயர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்/பண்டத்தரிப்பு சந்தை விநாயகர் கலையரங்கில் பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும். (இ)



# வெட்டுக்காயங்களுடன் கிணற்றிலிருந்து இளம் குடும்பப் பெண் சடலமாக மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை; நெளுக்குளத்தில் சம்பவம்

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து வெட்டுக்காயங்களுடன் இளம் குடும்ப பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெளுக்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சுற்றுவட்ட வீதியில் நேற்று அதிகாலை வெட்டுக்காயங்களுடன் கிணற்றிலிருந்து இரண்டு பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை பிரஸ்தாப இளம் குடும்ப பெண்ணின் கணவர் வெளிநாட்டுக்கு சென்றிருந்த நிலையில் வீட்டில் இப் பெண்ணும் அவரது இரு பிள்ளைகளும் தனிமையில் இருந்துள்ளனர். இவர்களுக்கு பாதுகாப்பாக அயல் வீட்டு பெண்ணொருவரும் இவர்களுடன் இருந்துள்ளார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு பின்னர் குறித்த பெண்ணிற்கு வெளிநாடு சென்ற கணவர் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார். எனினும் பெண் அழைப்பினை எடுக்கவில்லை. சந்தேகத்தில் அயல் வீட்டார் ஒருவருக்கு பெண்ணின் கணவன் தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு மனைவி தொலைபேசி அழைப்பை எடுக்கவில்லை சற்று சென்று அவதானித்து விட்டு தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளார்.

அயல் வீட்டார் குறித்த பெண்ணின் வீட்டிற்கு சென்ற நேரத்தில் பெண்ணின் இரு பிள்ளைகளும் அவர்களுக்கு பாதுகாப்பாக இருந்த பெண்ணும் உறங்கிக் கொண்டிருந்தனர். பிரஸ்தாப பெண்ணை காணவில்லையென வீட்டின் அறையினை சென்று பார்வையிட்ட சமயத்தில் வீட்டின் ஓர் அறையில் இரத்தம் காணப்பட்டுள்ளது.




தொடர்ந்து பெண்ணை வீடு முழுவதும் தேடியுள்ளனர். பின்னர் வீட்டின் ஒதுக்குப்புறத்தில் காணப்படும் பாவனையற்ற கிணற்றைப் பார்வையிட்ட சமயத்தில் கிணற்றில் சடலமாக மிதந்துள்ளார். இதனையடுத்து நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா மற்றும் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரால் குற்றத்தடவியல் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த குற்றத்தடவியல் பொலிஸார் கிணற்றுக்கு செல்லும் பாதையில் கத்தியொன்றை மீட்டெடுத்துள்ளனர். அத்துடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி தஸ்னீம் பௌசான் மற்றும் வவுனியா சட்ட வைத்திய அதிகாரி தம்மி லெ:ஃவிஸ்லோவா ஆகியோர் சடலத்தை பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டனர்.

குறித்த பெண்ணை வெட்டிக் கொலை செய்து விட்டு கிணற்றில் தூக்கி எறிந்திருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 11 மற்றும் 5 வயதுகளைக் கொண்ட இரு பிள்ளைகளின் தாயாரான கௌரி (வயது -32) என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (2-250)



வவுனியா, கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண் டேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. பிள்ளையார் மற்றும் முருகப்பெருமான் சிறிய தேரில் வலம்வர அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் பெருமான் பெரிய தேரில் வலம் வந்து அருள்பாலித்தனர். பெருமளவான பக்த அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களுக்காக கற்பூரச் சட்டிகளை ஏந்தியவாறும், தேங்காய் அடித்தும், அங்கப் பிரதிஸ்டை செய்தவாறும் அடியார்கள் அரோகரோ கோசத்துடன் வலம் வந்து அருட் கடாங்சங்களைப்பெற்றுக்கொண்டனர். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# மன்னார் நகரசபை கடற்கரை பூங்கா காணி தொடர்பில் கலந்துரையாடல்

## பிரதிகள் திணைக்களங்களுக்கு அனுப்பிவைப்பு

(மன்னார் )

மன்னார் நகர சபை கடற்கரை பூங்காக் காணி தொடர்பான பிணக்கு ஏற்பட்டுள்ள நிலையில், மேற்படி காணிப்பிணக்கு தொடர்பாக பொது மக்கள், பொதுச் சங்கங்களின் வேண்டுகோளுக்கமைவாக கலந்துரையாடல் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.




குறித்த கலந்துரையாடலில் சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், சங்கங்கள்,புத்திஜீவிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும், ஆதங்கத்தையும் தெரிவித்திருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட விடயங்கள் அறிக்கையாக தயாரிக்கப்பட்ட நிலையில்,மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனினால் நேற்று புதன்கிழமை உரிய திணைக்களங்களுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் நீதிமன்ற வழக்கிற்கு பிற்பாடு எமக்கு சாதகமான முடிவு கிடைக்காத பட்சத்தில் பொது அமைப்புக்கள், பொதுமக்கள், சங்கங்கள் ஒன்றிணைத்து எமது நில மீட்பிற்காக சாத்வீக ரீதியில் போராட்டங்களை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டு ,கலந்துரையாடல் நிறைவடைந்தது.

இம்மக்களின் கோரிக்கைக்கான நியாயத்தன்மையை பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-285)

# 'மதி நா' சஞ்சிகை வெளியீடு



(மன்னார்)

மன்னார், அல் மதீனா முஸ்லிம் பாடசாலையின் "மதி நா" சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொண்டிருந்தனர்.

நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் ஆய்வுரையை வவுனியா கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபனும் ஆற்றினார்கள்.

மடு பிரதேச செயலர் பிரிவில் மதீனா நகர் என்ற கிராமம் உருவாக்கப்பட்ட பின்னர் அந்தக் கிராமத்தின் எழுச்சியையும் அதனோடு தொடர்புபட்ட பாடசாலையின் வரலாற்றையும் குறிப்பிடுவதாக நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (2)

# கடந்தாண்டு முன்னெடுக்கப்பட்ட நடைமுறை இவ்வாண்டும் சிறுபோகத்தில் அமுல்படுத்தப்படும்

## முத்துஐயன்கட்டு கூட்டத்தில் தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் கடந்தாண்டுகளில் நடைமுறையில் இருந்த அதே நடைமுறை இவ்வாண்டும்சிறுபோகத்திற்கும் கொண்டுவரப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு,முத்துஐயன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக செய்கை தொடர்பிலான கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்துஐயன் கட்டு, முத்து விநாயகர் புரம் பொது நோக்கு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர் எஸ்.கோகுலதாசன் தலைமையில நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ந.சுதாகரன் மற்றும் பிரதி விவசாய பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர், கிராம அலுவலகர்கள், கமக்கார அமைப்புக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் முத்துஐயன்கட்டுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக 3 ஆயிரத்து மூன்று ஏக்கரும் ஆயிரத்து 377 ஏக்கர் உப உணவு செயகைக்குமாக மொத்தம் 4 ஆயிரத்து 390 ஏக்கர் சிறுபோக செய்கைக்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய செய்கையில் ஈடுபடுபவர்கள் வேலிஅமைக்க வேண்டும்.கால்நடையை வளர்ப்பவர்கள் பராமரிப்பாளர்களை வைத்து கால்நடை வளர்க்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை உரிமையாளர்களுக்கான அறிவிப்பாக எருமை மாடு ஒன்றுக்கான பிடிகூலியாக ஐந்தாயிரம் ரூபாவும், 24 மணி நேர பராமரிப்பு செலவாக ஐநூறு ரூபாயும் பசுமாடு ஒன்றுக்கான பிடி கூலியாக ஆயிரம் ரூபாயும் பராமரிப்பு செலவாக 250 ரூபாயும் கால்நடை உரிமையாளரிடம் இருந்து அறவிடப்படும் என்றும் பயிரழிவை ஏற்படுத்தக்கூடிய கால்நடைக்கு பிடிகூலி 500 ரூபாயும் பராமரிப்பு செலவாக 125 ரூபாயும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிர் உரிமையாளர்கள் கால்நடையினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு செல்லவேண்டும். பிடிக்கப்படும் கால்நடைகள் மிருகவதைக்கு உட்படும் பட்சத்தில், பயிர் உரிமையாளரிடம் இருந்து அதற்கான நட்டம் அறவிட்டு வழங்கப்படும்.

விவசாய செய்கைக்கு அழிவுகளை ஏற்படுத்தும் கால்நடைகளை பிடித்தால் கமக்கார அமைப்புகள் ஊடாக அதனை உறுதிப்படுத்தி விவசாய போதனாசிரியருக்கும் விவசாய உத்தியோகத்தருக்கும் தெரிவிக்கும் இடத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஒட்டுசுட்டான் விவசாய உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (2)

# செட்டிகுளத்தில் காணிப் பிணக்குகள் தொடர்பான 88 முறைப்பாடுகள்

## முதல்கட்ட விசாரணை 23 ஆம் திகதி ஆரம்பம்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பான 88 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள காணி உரிமம் மற்றும் உரிமை, காணி ஆவணம், காணி எல்லை என்பன தொடர்பான 88 பிணக்குகள் வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக 40 பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் மற்றும் விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணி வரை செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

சம்பந்தப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைகட்கப்பட்டுள்ளன. அவர்கள் வருகை தந்து தமது காணிப் பிணக்குகள் தொடர்பில் தீர்வினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், காணிப் பிணக்குடையோர் வருகை தந்து புதிய முறைப்பாடுகளையும் அன்றைய தினம் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)




# புத்தூர் சந்தி பண்டமரவடியிலிருந்து

# மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு இன்றிரவு

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தில் பொங்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றிரவு நடைபெறவுள்ள நிலையில் அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி இன்றிரவு விசேட பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய முறைப்படி மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடியிலிருந்து மடைப்பண்டம் மாட்டு வண்டிகளில் எடுத்து வருவதற்காக சென்ற தொண்டர்கள் இன்று ஆலயத்தை வந்தடையவுள்ளனர்.

இதனையடுத்து நாகதம்பிரான் ஆலயத்தின் ஆண்டு உற்சவப் பொங்கல் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம் பெயர் தேசங்களிலிருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதிக பக்தர்கள் வருகை தரும் இவ்வாலயத்தின் புனிதத்தன்மை கருதியும் பக்தர்களின் நன்மை கருதியும் இந்த புனித பிரதேசத்திற்குள் மதுப்பாவனை மற்றும் பொலித்தீன் பாவனை என்பனவற்றிற்கு முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக் கருதி பாதுகாப்புக் கடமைகளைப் பொறுப்பேற்றிருக்கின்ற பொலிஸார் இம்முறை 600 இற்கும் மேற்பட்ட பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இதற்குப்பத்துப்பேர் கொண்ட பொலிஸ் அணியொன்றும் இந்தக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தின் உற்சவத்திற்காக வருகின்ற பக்தர்கள் இயன்றளவு தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலய நிர்வாகம் கோரியுள்ளது.

உற்சவத்தின் பாதுகாப்பு, சுகாதார நடைமுறைகள் என்பவற்றை சகல தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் ஆலய நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இடங்களிலிருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏ-35 பிரதான வீதியில் இருந்து ஆலயத்திற்கு புளியம்பொக்கனை சந்தியூடாக ஆலயத்திற்கு செல்லும் வீதியினையும் ஆல யத்திலிருந்து வெளிச் செல்வதற்காக புளியம்பொக்கனை தருமபுரம் வீதியினையும் பயன் படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (2-315)

# புத்தர் சிலை காணி தொடர்பில்

# ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும்

(குருமன்காடு)

வவுனியா, மூனாமடுவில் இராணுவத்தால் வழிபடப்பட்ட புத்தர் சிலை உள்ள காணியை வழங்குமாறு பௌத்த பிக்கு ஒருவர் வவுனியா மாவட்ட செயலகத்தை கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியே தீர்மானம் எடுக்கப்படும் என மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மூனாமடுவில் உள்ள நாகபூஷணி அம்மன் ஆலயம் நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் மற்றும் விசாயிகளின் வழிபாட்டுத்தெய்வமாக இருந்து வந்துள்ளது. ஒரு றூட் காணியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

வவுனியா மூனாமடு மற்றும் பேயாடிக்கூழாங்குளம் போன்ற இடங்களில் வாழ்ந்து வந்த மக்கள் காலாகாலமாக விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். அவர்கள் வயல் அறுவடைக் காலங்களில் அந்நிலங்களுக்கு அண்மையில் இயற்கை விவசாயத்தை பாதுகாக்கும் இந் நாக பூஷணி அமைத்து வழிபாட்டோடு மட்டுமல்லாமல் அவற்றில் இளைப்பாறும் இடங்களையும் அமைத்து தமது தொழிலைச் செய்தனர். விளைச்சலின் பின் பொங்கல் செய்தும் வழிபட்டு வந்தனர்.

1995 ஆம் ஆண்டு அப்பகுதி இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டது. இதன் பின் இராணுவத்தினர் தாம் அமைத்த இராணுவ முகாமில் இராணுவ வழிபாட்டிற்காக சீமெந்தினால் புத்தருடைய சிலை ஒன்றை நிறுவி வழிபட்டு வந்தனர்.

ஆனால் தற்போது அந்தப் பகுதிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட போதும் அந்தப் புத்தர் சிலை அவ்விடத்தில் இருந்து அகற்றப்படவில்லை.

இந்நிலையில், வவுனியாவில் உள்ள பிக்கு ஒருவர் குறித்த புத்தர் சிலை அமைந்துள்ள காணியை ஒப்படைக்கும் படி மாவட்ட செயலகத்தை கோரியுள்ளார். ஆனால், இவ்விடயம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியே தீர்மானம் எடுக்கப்படும் என மாவட்ட செயலகம்அறிவித்துள்ளது.(2-250)

# வித்தியானந்த கல்லூரியில் வள்ளுவர் விழா




(முல்லைத்தீவு)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் 2 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் நிதியுடவியுடன் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியினர் நடத்திய வள்ளுவர் விழா நேற்றுக் கல்லூரி வளாகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு நிகழ்வுகள் பிற்பகல் 1.30 மணியுடன் நிறைவுற்றது.

கல்லூரி அதிபர் பொன்ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் லலீசன் மற்றும் அவரது குழுவினர் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வராஜா மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்களினால் திருக்குறளையும் அதன் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டும் வகையிலும் திருவள்ளுவரின் பெருமையைக் கூறும் வகையிலும் பல்வேறு சிறப்புப் பேச்சுக்கள், கவிதைகள், இசை நடன நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதுடன் யாழ்ப்பாணம் தமிழ் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட'சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றது. (2)

# கரைச்சி பிரதேசசபையின் எல்லைக்குள் யாசகம் செய்வதற்கு தடைவிதிப்பு

## ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் அமுல்

(கிளிநொச்சி)

எதிர்வரும் 01.04.2019 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் யாசகம் செய்தல் மற்றும் யாசகம் வழங்குதல் என்பனவற்றிற்கு கரைச்சி பிரதேச சபையினால் தடை விதிக்கப்பட்டது என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் யாசகம் செய்தல், யாசகத்தை ஊக்குவித்தல் என்பனவற்றிற்குத் தடை செய்யப்பட்டிருக்கும். யாசகம் செய்பவர்களில் யாராவது யாசகம் செய்வதனால் அவர்களது குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என கருதுகிறார்களாயின் அவர்கள் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் பதிவு செய்வதனூடாக அவர்களுக்கான நல் வழிகளை காண்பிக்கும் நடைமுறையும் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகிறது.

யாசகம் செய்வதை தொழிலாக மேற்கொள்ளும் நபர்களுக்கு வாழ்வாதாரம் செய்ய சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது தவிர கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்கு வெளியே இருந்து வந்து இப்பகுதியில் யாசகம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். அது தவிர பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், சேவைச் சந்தை மற்றும் பொது இடங்களில் யாசகம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ் அறிவித்தல்களை பின்பற்றுமாறு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் கேட்டுள்ளார். (2)

# சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கு காசோலைகள், தூய்மையாக்கல் உபகரணங்கள்

(கண்டாவளை)

சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக பத்தாயிரம் ரூபாய் காசோலைகள், தூய்மையாக்கல் உபகரணங்கள் என்பன நேற்று முன்தினம் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 22 சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக தலைவர் சுப்பிரமணியம் சுரேனின் ஆலோசனைக்கமைவாக பிரதேச சபையின் உப தவிசாளர் கஜனினால் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சபையின் செயலாளர், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், சபையின் விடயம் சார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# பாரதம்

## வாக்குக்கும் பணம்! ஜனநாயகத்தின் சவால்



தமிழகத்தில் மக்களவை மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் தொடங்குவதற்கு முன்பே தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படையினராலும் கண்காணிப்புக் குழுவினராலும் ரூ.6 கோடியே 77 இலட்சம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. தேர்தல் வெற்றிக்காக எந்த நிலைக்கும் செல்வதற்கு அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத்தான் இதுபோன்ற செய்திகள் உணர்த்துகின்றன. தேர்தல்களின் முக்கியத்துவம் குறித்தும் தங்களது ஜனநாயகக் கடமை குறித்தும் வாக்காளர்களுக்கு இன்னும் ஆழமான புரிதல் ஏற்படவில்லையோ எனும் கேள்வியும் எழுகிறது.

அனைவருக்கும் வாக்குரிமை என்பது இந்திய அரசமைப்பின் தனித்த சிறப்பியல்புகளில் ஒன்று. வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட இந்த சமத்துவ உரிமை படிப்படியாகத்தான் நடைமுறைக்கு வந்தது. எதிர்கால இந்தியா முழுமையான ஜனநாயக நாடாக விளங்க வேண்டும் என்று இலட்சியத்தோடு இந்திய அரசமைப்பை வடிவமைத்தவர்கள், அனைவருக்கும் சமத்துவ உரிமையை உறுதிப்படுத்தினார்கள். ஆனால், அந்த உரிமையின் முழு பரிணாமத்தையும் அறியாத வகையிலேயே இந்திய வாக்காளர்களில் பலர் அறியாமைக்குள் அமுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வாக்காளர்களின் ஏழ்மையைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் கட்சிகள் வாக்குகளை விலைபேசும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இச்செயல்களோடு தொடர்புடையதாகத் தெரியவரும் வேட்பாளர்கள் தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை இழக்க வேண்டியிருக்கும் என்ற நெருக்கடியை உருவாக்குவது அவசியம். இல்லையென்றால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

தேர்தல் காலத்தில் வங்கிக் கணக்குகளின் பணப்பரிமாற்றங்கள் முழுமையான கண்காணிப்புக்கு உள்ளாகின்றன. ஆனால், தேர்தலின்போது சுற்றிவரும் பணம் என்பது பெரும்பாலும் கணக்கில் வராததாகவே இருக்க முடியும். எனவே, வாகனச்சோதனைகளின் மூலம் அவற்றை முழுமையாகக் கண்டறிந்து தடுத்துவிட முடியாது. வாக்காளர்களிடம் அந்தப் பணம் கொண்டுசெல்லப்படும் ஒவ்வொரு நிலையிலும் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்பட வேண்டும். தொகுதிகள் தோறும் பகுதிகள் வாரியாக நிலையான கண்காணிப்புக் குழுக்கள் பணிபுரிவதோடு, புகார்கள் கிடைக்கப்பெற்றால் உடனடியாக அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தயார்நிலையில் இருக்க வேண்டும்.

அனைத்தைவிடவும் முக்கியமாக, வாக்குரிமையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வாக்காளர்களிடம் ஏற்படுத்த வேண்டும். ஒரு வாக்கு என்பது இந்தியக் குடிமக்களின் அரசியல் பெருமிதம்; அடுத்த தலைமுறையின் நல்வாழ்வைத் தீர்மானிக்கும் அஸ்திரம் என்பதை உணரவைக்க வேண்டும். ஒவ்வொரு வாக்காளரும் தனது வாக்கு விற்பனைக்கு அல்ல என்று உறுதியெடுத்துக் கொள்ளும்போதுதான் இந்திய ஜனநாயகம் அதன் உண்மையான வலிமையைப் பெற முடியும்.

**த.ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

## விவசாயிகள் உயிரோடு இல்லையென தேர்தல் ஆணையகம் நினைக்கிறதா?

### சீமான் சீற்றம்




(சென்னை)

"மயில் சின்னம் கேட்டபோது, 'உயிருடன் இருக்கும் சின்னத்தை தர முடியாது' என மறுத்த தேர்தல் ஆணையகம் தற்போது கரும்பு விவசாயி சின்னம் வழங்கியுள்ளது. அப்படியானால், விவசாயிகள் உயிரோடு இல்லை என தேர்தல் ஆணையகம் நினைக்கிறதா...?" என, சீமான் சீற்றத்துடன் கேள்வி எழுப்பினார்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஊடகவியலாளர் மன்றத்தில் தனது கட்சியின் 'கரும்பு விவசாயி' சின்னத்தை வெளியிட்ட நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

"சமரசம் இல்லாத தலைவரையே நாங்கள் எதிர்பார்த்தோம். எனவே, கூட்டணிக்கு அழைத்தவர்களை புறக்கணித்தோம். 'சரணடைந்து வாழ்வதை விட, சண்டையிட்டு சாவதே மேல்' என்ற கொள்கையை நாங்கள் கொண்டதால், கூட்டணியை புறக்கணித்து தனித்து போட்டியிட முடிவெடுத்தோம்.

நாங்கள் மயில் சின்னம் கேட்டிருந்தோம். ஆனால் தேர்தல் ஆணையகம், 'உயிருடன் இருக்கும் சின்னத்தை தர முடியாது' என்றார்கள். ஆனால் தற்போது, "கரும்பு விவசாயி' சின்னத்தை எங்களுக்கு வழங்கியுள்ளது. அப்படியானால், விவசாயிகள் உயிரோடு இல்லை என தேர்தல் ஆணையகம் நினைக்கிறதா...? விவசாயிகளையும் விவசாயத்தையும் காக்கவே எங்களுக்கு இந்த சின்னம் கிடைத்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம்.

கோயில்களில் ஆடு, மாடுகளை பலி கொடுப்பதுபோல், நாட்டின் பாதுகாப்புக்காக போராடும் இராணுவ வீரர்களின் உயிரை அப்பட்டமாக பலி கொடுத்துள்ளது பா.ஜ.க. அரசு. எத்தனையோ உயர்மட்ட பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த பாதுகாப்புத்துறை அமைச்சகத்திற்கு தெரியாமல் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை தீவிரவாதிகள் எவ்வாறு நுழைந்திருக்க முடியும்...? நாட்டின் இராணுவ வீரர்களையும் ரஃபேல் விமான கோப்புகளையும் பாதுகாக்க முடியாத அரசு, தன்னை நாட்டின் பாதுகாவலர்கள் என எப்படி கூறிக் கொள்ள முடியும்...?

சிறையில் உள்ள 7 தமிழர்களை எப்போதோ விடுதலை செய்திருக்க முடியும். அதற்கான திறன் மாநில அரசிடம் இருந்தும் ஆட்சியாளர்கள் வாய்திறக்கவில்லை, தற்போது, 7 தமிழர் விடுதலை பற்றி பேசுவது கண் துடைப்பு என்பது அனைவருக்கும் புரிந்திருக்கும்" என மேலும் தெரிவித்தார். (7)

### சூடுபிடிக்கும் தேர்தல் களம்

## 153 அமைச்சர்களின் சொத்து விபரங்கள் ஜனநாயக சீர்திருத்த அமைப்பால் வெளியீடு

| பெயர் | கட்சி | தொகுதி | 2009(கோடி) | 2014 | அதிகரிப்பு | சதவீதம்% |
|---|---|---|---|---|---|---|
| சத்ருஹன்சின்ஹா | பாஜக | பாட்னாசாஹிப் | ரூ.15 | ரூ.131 | ரூ.116 | 778 |
| பினாகிமிஸ்ரா | பிஜேடி | ஒடிசா-பூரி | ரூ.29 | ரூ.137 | ரூ.107 | 362 |
| சுப்ரியாசுலே | என்சிபி | பாரமதி(மராட்டியம்) | ரூ.51 | ரூ.113 | ரூ.62 | 121 |
| ரகுநாத் | பாஜக | குஜராத்(நவ்சரி) | ரூ.24 | ரூ.74 | ரூ.50 | 208 |
| போன்சலே | என்சிபி | சதாரா(மராட்டியம்) | ரூ.11 | ரூ.60 | ரூ.48 | 417 |
| ஹர்சிம்ரத்பாதல் | | பத்திண்டா(பஞ்சாப்) | ரூ.60 | ரூ.108 | ரூ.47 | 79 |
| சாம்பசிவராவ் | டிடிபி | ஆந்திரா-குண்டூர் | ரூ.14 | ரூ.59 | ரூ.44 | 305 |
| பி.சி.மோகன் | பாஜக | மத்தியபெங்களூர் | ரூ.5 | ரூ.47 | ரூ.42 | 786 |
| டி.கே.சுரேஷ் | காங். | பெங்களூர்(ரூரல்) | ரூ.47 | ரூ.85 | ரூ.38 | 82 |
| வருண்காந்தி | பாஜக | உ.பி.சுல்தான்பூர் | ரூ.4 | ரூ.35 | ரூ.30 | 625 |
| | | | | | | |

(டில்லி)

கடந்த 2009 ஆம் ஆண்டு அமைச்சர்களாக இருந்து மீண்டும் 2014 ஆம் ஆண்டு அமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்ட 153 அமைச்சர்களின் சொத்து மதிப்பு பற்றிய விபரங்களை ஜனநாயகத்திற்கான சீர்திருத்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி 153 அமைச்சர்களின் சொத்துமதிப்பு சுமார் 143 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு பா.ஜ.க., காங்கிரஸ், அ.தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், தெலுங்கு தேசம், பிஜு ஜனதா தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், சமாஜ்வாதி உள்ளிட்ட 21 கட்சிகளை சேர்ந்த 153 அமைச்சர்களின் சொத்து மதிப்பே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் காலம் நெருங்கியுள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து மதிப்பு பற்றிய பிரமாண பத்திரத்தினை தாக்கல் செய்யவேண்டும் என தேர்தல் ஆணையகம் அண்மையில் அறிவித்திருந்தது.

குறித்த பத்திரத்தில் இடம் பெற்றிருத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (7)

## யாழ்.பல்கலை. மாணவர்களின் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவாக தாயகப் பல்கலைக்கழகத்தினர் போராட்டம்



தாயக பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக் கழக ஆசிரியர்கள், பணியாளர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினால் ஒழுங்கமைக் கப்பட்ட எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளிக்கும் முகமாகவும் இங்கிலாந்து தமிழ் பல்கலைக் கழக மாணவர்களால் மற்றும் புலம்பெயர் தமிழர்களால் பிரிட்டன் வெளியுறவு மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை இணை அனுசரணை வழங்கி, நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், இலங்கையின் விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையிடம் பாரப்படுத்த வேண்டும் என்பதும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மனு ஒன்றும் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

## ஆப்கானிஸ்தானில் ஓராண்டில் 3700 பயங்கரவாதிகள் கொன்று குவிப்பு!



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடக்கு பகுதியில் டும் ஓராண்டு காலத்தில் 3,771 பயங்கரவா ளைக் கொன்று குவித்ததாக அந்நாட்டின் ப்பு படையினர் நேற்றுத் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு வடக்கு பகுதியில் பொன் பயங்கரவாதிகள் மற்றும் பல்வேறு ிய பயங்கரவாத குழுக்களின் ஆதிக்கம் ண்மைக்காலமாக மீண்டும் தலைதூக்க ாடங்கியுள்ளது.

பயங்கரவாதிகள் மீது ஈவிரக்கம் காட்டாமல் வடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் இராணுவம் றும் பொலிஸாருக்கு ஜனாதிபதி அஷ்ரப் னி உத்தரவிட்டுள்ளார்.

அவ்வகையில், வடக்கு மற்றும் வடகிழக்கு ப்கானிஸ்தானுக்கு உட்பட்ட பல பகுதிகளில் ந்த ஓராண்டு காலமாக நடைபெற்ற தேடுதல் பட்டை மற்றும் மோதல்களில் 3,771 ங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவத் ர் '209 ஷஹீன்' படையை சேர்ந்த துணை பதி ஆதம் கான் மட்டின் நேற்றுத் தெரிவித் ர்ளார்.

'வாலித் 97' என்ற பெயரில் நடைபெற்ற இந்த பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் மொத்தம் 88 மோதல்களில் கொல்லப்பட்ட 3,771 பயங்கரவாதிகளில் 64 பேர் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இராணுவத்தின் தரப்பிலும் அதிகம் பேர் உயிரிழந்ததாக உள்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

எனினும், தங்கள் உடலில் கடைசி சொட்டு இரத்தம் உள்ள வரையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை நடத்துவோம் என்று பெரும்பான்மையான இராணுவ வீரர்கள் சபத மேற்றுள்ளதாக சில செய்திகள் தெரிவித்துள்ளன. (7)

## மியன்மாரில் திடீர் துப்பாக்கிச்சூடு

### தேடுதல் வேட்டைகள் தீவிரம்



(யாங்கோன்)

மியன்மாரில் இராணுவ வீரர்கள் சென்ற கனங்கள் மீது கிளர்ச்சிக் குழுவினர் திடீர் பாக்கி சூடு நடத்தியதைத் தொடர்ந்து தேடுதல் பட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினே நிலத்தில் சிறுபான்மை ரோகிஞ்யா இன முஸ் ்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து பன்மாரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான கள் தொகையை கொண்டவர்களாக இருக் இவர்களில் சிலர் ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தாக்குதல் நடத்தும் ரோகிஞ்யா கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவ வேட்டை தீவிரம் அடைந்தது. இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்கு பயந்து இலட்சக்கணக்கான ரோகிஞ்யா முஸ்லிம்கள் பங்களாதேஷிற்கு தப்பிச்சென்று தஞ்சம்புகுந்துள்ளனர்.

அதன்பின்னரும் அரகான் இராணுவம் என்ற கிளர்ச்சிக் குழுவானது, இராணுவம் மற்றும் காவல்துறையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றது. கடந்த வாரம் வியாழக்கிழமை மிராக் யு பகுதியிலும் வெள்ளிக்கிழமை கியாக்டாவ் பகுதியிலும் இராணுவ வீரர்கள் சென்ற வாகனம் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு மிராக் யு நகருக்குள் இராணுவ வீரர்கள் வாகனங்களில் சென்றபோது, மீண்டும் தாக்குதல் நடத்தினர். அங்குள்ள வீடுகளுக்குள் பதுங்கியிருந்து கிளர்ச்சியாளர்கள் தாக்கினர். இராணுவ வீரர்களும் பதிலடி கொடுத்தனர். சுமார் அரைமணி நேரம் நீடித்த இந்த துப்பாக்கி சண்டையில் 6 பேர் காயமடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் இராணுவம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது. (7)

### பிரெக்சிற் விவகாரம்

## நாடாளுமன்றில் மீண்டும் வாக்கெடுப்பு கிடையாது

### சபாநாயகர் அதிரடி உத்தரவு





(லண்டன்)

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் 'பிரெக்சிற்' ஒப்பந்தம் மீது 3 ஆவது முறையாக வாக்கெடுப்பு நடத்த அனுமதி கிடையாது என சபாநாயகர் ஜான் பெர்கோவ் அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் நடவடிக்கை 'பிரெக்சிற்' என அழைக்கப்படுகிறது. இதற்கான காலக்கெடு எதிர்வரும் 29 ஆம் திகதி முடிவடைகிறது.

ஆனால் திட்டமிட்டபடி 'பிரெக்சிற்' வெற்றிகரமாக நடப்பது கேள்விக்குறியாகி உள்ளது. பிரெக்சிற்றுக்காக, ஐரோப்பிய கூட்டமைப்புடன் இங்கிலாந்து பிரதமர் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந்தம்தான் இதற்கு முட்டுக் கட்டையாக உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பெரும்பான்மையான எம்.பி.க்கள் அதனை நிராகரித்துவிட்டனர்.

அதேபோல், ஒப்பந்தம் இல்லாமல் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் இங்கிலாந்து எம்.பி.க்கள் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த வலியுறுத்துகிறார்கள்.

ஆனால் ஐரோப்பிய கூட்டமைப்போ 'பிரெக்சிற்' நடவடிக்கையில் புதிய ஒப்பந்தத்துக்கு வாய்ப்பு இல்லை என கைவிரித்துவிட்டது. எனவே எம்.பிக்களை சமாதானம் செய்யும் வகையில் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தில் சில சட்டபூர்வ மாறுதல்களை தெரசா மே கொண்டுவந்தார்.

அதனை தொடர்ந்து, கடந்த வாரம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இந்த திருத்தப்பட்ட 'பிரெக்சிற்' ஒப்பந்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. எனினும் அந்த ஒப்பந்தத்தையும் எம்.பிக்கள் நிராகரித்துவிட்டனர்.

அதேசமயம், பிரெக்சிற் நடவடிக்கையை தாமதப்படுத்தும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் சிறப்பான ஒரு ஒப்பந்தத்துடன் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் என நம்பிக்கை தெரிவித்துள்ள தெரசா மே, 'பிரெக்சிற்' ஒப்பந்தம் மீது மீண்டும் வாக்கெடுப்பு நடத்த ஆலோசித்து வருவதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் 'பிரெக்சிற்' ஒப்பந்தம் மீது 3 ஆவது முறையாக வாக்கெடுப்பு நடத்த அனுமதி கிடையாது என சபாநாயகர் ஜான் பெர்கோவ் அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில், "நாடாளுமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிப்பதை தடுக்கவும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுக்கு உரிய மரியாதை அளிக்கவும் இந்த நடவடிக்கை அத்தியாவசியமாகி உள்ளது" என மேலும் தெரிவித்தார். (7)

## இரு வேறு விமானங்களில் தீ அவசரமாகத் தரையிறக்கம்

(தெஹ்ரான்)

ஈரான் நாட்டு விமானத்தில் ஏற்பட்ட தீ பத்தில் 100 இற்கும் மேற்பட்ட பயணிகள் திர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். ஈரான் வசர சேவைகள் திணைக்களம் இந்த டயத்தை தெரிவித்துள்ளது.

தலைநகர் தெஹ்ரானில் உள்ள மெஹ் பாத் விமான நிலையத்தில் உள்ளூர் நரப்படி நேற்று முன்தினம் இரவு செவ் ாய்க்கிழமை 9 மணியளவில் ஈரானியன் யார் என்ற விமானம் புறப்படத் தயாரானது. டுதளத்தில் விமானம் புறப்பட்ட போது, மான இறக்கையின் கீழ் பகுதியில் தீப்பிடி தது.

இந்நிலையில் விமானம் அவசரமாக றுத்தப்பட்டு, பயணிகள் அனைவரும் உடன யாக வெளியேற்றப்பட்டனர். இதையடுத்து டனடியாக தீயணைப்பு படையினர் மற்றும் ாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நியூயோர்க்கிலிருந்து லண்டன் சென்ற போயிங் 777 ரக விமானத்தில் தீப்பரவல் ஏற்பட்டதையடுத்து கனடா, சென்.ஜோன்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவசரமாக தரையிறக்கப்பட்டது.

209 பயணிகளுடன் ஜோன் எப்.கெனடி சர்வதேச விமான நிலையத்திலிருந்து லண்டன் ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற போயிங் 777 ரக விமானத்திலேயே தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. (7)

## கனேடிய இணையத்தளத்தில் வெளியான நியூசிலாந்து துப்பாக்கிதாரியின் அறிக்கை

### விசாரணைகள் ஆரம்பம்



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் வெளியிட்ட 80 பக்க அறிக்கையினை கனேடிய இணைத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனேடிய வலது சாரி இணையத்தளம் ஒன்றே இவ்வாறு குறித்த அறிக்கையை மீண்டும் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இது குறித்த விசாரணைகளை ஹமில்டன் பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பிட்ட இனத்தாருக்கு எதிராக மனதார வெறுப்பைத் தூண்டுவது கனேடிய சட்டத்தின்படி தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

எனவே இணையத்தளத்தின் உரிமையாளருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டால், இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (7)

# தமிழ் மக்கள் மீதான சுமந்திரனின் அக்கறை போலி நாடகமாகும்



## மகிந்த அணி விமர்சனம்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தமிழ் மக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார். இச்செயற்பாடுகள் போலி நாடகமாகும் என மகி ந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.சந்திரசேன விமர்சித்துள்ளார்.

யுத்த காலத்தில் சுமந்திரன், சம்பந்தன் ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நிவாரணங்களையும் ஆதரவையும் வழங்க முன்வரவில்லை. இவர்கள் பாதுகாப்பாகவே இருந்தார்கள்.

அரசாங்கமே அன்று அனைத்துவிதமான உதவிகளையும் தமிழ் மக்களுக்கு செயற்படுத்திக் கொடுத்தது. ஆனால் இன்று இவர்கள் இராணுவத்தினருக்கு எதிராகச் செயற்படுகின்றமையானது பயனற்றதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் தவறானவையாகும். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலேயே அடுத்த அரசாங்கம் உருவாக்கப்படும் என்றும் சந்திரசேன தெரிவித்தார். (இ-7)

# பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு வழங்க அரசியல்வாதிகளே தடையாகவுள்ளனர்

## பாலித ரங்கே பண்டார விசனம்



(கொழும்பு)

அரச துறைகளில் பணியாற்றிய, கடந்த அரசாங்கத்தால் அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது , சில அரசியல்வாதிகளால் அதற்குத் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

இதன் காரணமாக உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தீர்வினை வழங்க முடியாத நிலைமையே காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# 1200 கிலோகிராம் போதைப்பொருள் ஏப்ரல் முதல் வாரத்தில் அழிப்பு

## ஜனாதிபதி செயலணி பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 1,200 கிலோகிராம் போதைப்பொருளை அழிப்பதற்கான நடவடிக்கைகள், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளரும் விசேட வைத்திய அதிகாரியுமான சமந்த கித்தலவல ஆராய்ச்சி தெரி வித்தார்.

கொழும்பில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

கொழும்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டுமான பணிகளில், 10ஆயிரம் வரையான ஊழியர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் அதில் நூற்றுக்கு 80 வீதமானோர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதாகவும் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுபில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் குறித்த ஊழியர் களில் அதிமானோர், போதைப் பொருள் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு எதிராக சர்வதேச தலையீடுகள் அதிகரிப்பு-விஜயதாஸ



(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் அனுமதி இல்லாது சர்வதேச உடன்படிக்கை ஒன்றின் இணை அனுசரணையை அங்கீகரிக்க முடியாது என்ற விதப்புரை இருந்தும் ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்காத போதும் அவற்றை தாண்டி ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரும் புதிய பிரேரணைக்கு அரசு இணை அனுசரணை வழங்கியது எவ்வாறு என நாடாளுமன்றில் எதிர்க்கட்சி உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

இன்று இலங்கைக்கு எதிராக சர்வதேச தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

அவ்வாறு இருக்கையில் இலங்கையில் சகவாழ்வு, நல்லிணக்கத்தை உருவாக்க தேசிய வேலைத்திட்டம் இல்லை என்று கூறுவதும் வெறுப்புணர்வுகளை தடுக்கும் சட்டங்கள் இலங்கை சட்டக்கோவையில் இல்லை என கூறுவதும் சர்வதேசத்திற்கு நாமே வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கும் வகையில் அமையும் எனவும் விஜயதாஸ தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானம்

ஒரு மாடி வீட்டில் ஒரு பெரிய மனிதர் இருந்தார். மிகவும் விலை உயர்ந்த கார் ஒன்று வைத்திருந்தார். எங்கே போனாலும் அதிலே தான் போய்வருவார். அவர் கால் தரையில் பட்டதேயில்லை அவ்வளவு வசதி.

அவர் ஒரு நாள் திடீரென இறந்து போய் விட்டார். அதற்குப்பிறகு அவரைப் பற்றி இருவர் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் சொன்னார் “அந்தப் பெரிய மனிதர் இருந்தாரே அவர் இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டார்” என்றார். மற்றவர் “எதிலே போனார் அவர் காரில் தானே!” என்றார். இதைக்கேட்ட மற்றவரு க்கு சிரிப்பு வந்துவிட்டது!

உலகை விட்டுப் போகும் போது எதனைக் கொண்டு போக முடியும்? அனைத்தையும் விட்டுவிட்டுத்தான் போக வேண்டும். அதனாலே தான் இயற்கை அனைத்தையும் ஒரேமாதிரி உலகிற்கு அனுப்புகின்றது! ஒரே மாதிரி உலகத்தை விட்டும் அனுப்புகின்றது!

அதில் பெரியவர், சிறியவர் என்ற வித்தியாசம் இல்லை. வித்தியாசத்தை இவர்களே ஏற்படுத்துகிறார்கள். நான் பெரியவன், நீ பெரிய வன் எனச் சொல்பவர்களுக்கு ஞானம் வரும் போது இந்த வித்தியாசம் மறையும்! ஒரு ராஜா இருந்தார். ராஜாவும் ராணியும் ஒரு நாள் வெளியே போயிருந்தார்கள்.

அந்த அரண்மனையிலே ஒரு வேலைக்காரப் பெண் இருந்தாள். அவளுக்கு அரசருடைய மஞ்சத்தை தயார் செய்வது தான் வேலை. ஹம்ச தூளிகா மஞ்சம். அந்தப் படுக்கையைத் தயார் செய்வது சாதாரண வேலையில்லை. கிட்டத்தட்ட 4 மணி நேரமாகும். முதல் ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும்! அதற்கு மேல் ஒரு மெத்தையை விரிக்க வேண்டும்! அதற்கு மேல் காம்பில்லாத மலர்களைத் தூவ வேண்டும். இப்படி ஏழு அடுக்குகள் உண்டாக்கி அந்தப் படுக்கையை தயாரிக்க வேண்டும். வழமைபோல அன்றும் அந்த வேலைக்காரப் பெண் மஞ்சத்தை தயார் செய்தாள்.

வெளியே போன ராஜாவும் ராணியும் இன்னும் திரும்பி வரவில்லை. அவர்கள் வருவதற்குள் ஒரு ஐந்து நிமிடம் இந்தப் படுக்கையிலே படுத்துப் பார்போம் என ஆசை வந்தது. ஐந்து நிமிடம் தானே என நினைத்து வேலைக்காரப்பெண் படுக்கையிலே ஏறிப்படுத்து விட்டாள். பாவம் அதில் படுத்தவுடன் சுகமான தூக்கம் வந்து விட்டது போல குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்து விட்டாள்.

நான்கு மணி நேரம் கழித்து ராஜாவும் ராணியும் திரும்பி வந்தார்கள்! அழுக்கு உடையுடன் அந்த வேலைக்காரப் பெண் படுத்திருந்தாள். ராஜாவுக்கு கோபம் வந்து விட்டது. உடனே காவலாளிகளை அழைத்து அந்த வேலைக்காரப் பெண்ணை தூணிலே கட்டி சாட்டையால் அடிக்கும்படி உத்தர விட்டார்.

சாட்டையால் அடிக்கும் போது அந்த வேலைக்காரப் பெண் அழவில்லை. சிரித்துக் கொண்டிருந்தாள். ராஜாவுக்கு இதைப் பார்த்ததும் ஆச்சரியம்! “ஏன் இவள் அழாமல் சிரித்துக் கொண்டிருக்கிறாள்” என்று கேட்டார். அதற்கு அப்பெண் “உங்களுடைய படுக்கையிலே நான்கு மணி நேரம் படுத்ததற்கே எனக்கு இத்தனை சவுக்கடி என்றாள் வாழ்நாள் முழுக்க படுத்த உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கும் என நினைத்தேன் சிரிப்பு வந்தது ”என்றாள்.

அதைக் கேட்ட பிறகு தான் ராஜாவுக்கு அறிவு வந்தது. மனம் மாறி தனது செயலுக்காக வருத்தப்பட்டார். அந்த பெண்ணை விடுதலை செய்தார். அரசனுக்கு ஞானம் பிறந்த கதை இது.

இந்தக் கதையை ஒரு சிறிய பையன் கேட்டான். அவனது வீட்டில் அம்மா லட்டு செய்து டப்பாவில் வைத்திரு ந்தார். திடீரென பத்து லட்டு காணாமல் போய் விட்டன. பையன் ஒரு லட்டை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அம்மாவிடம் மாட்டிக் கொண்டான். லட்டை தெரியாமல் எடுத்து சாப்பிடுவது தவறு. அதற்கு தண்டனையாக ஒரு லட்டுக்கு 10 தோப்புக் கரணம் போடு என்றார். இவன் காதைப்பிடித்துக் கொண்டு 20 தடவை தோப்புக் கரணம் போட்டான். மீதி 80 எங்கேயென அம்மா கேட்டார்! அதற்கு அப்பாதான் போட வேண்டும். நானில்லை என்றான் பையன்.

# நாலகவுக்கு மறியல் நீடிப்பு



(கொழும்பு)
பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கிழக்கில் வைத்து கொலை செய்யவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸை கொழும்பில் வைத்து கொலை செய்யவும் மேலும் பல உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக அவதூறு பரப்பவும் சதி செய்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார்.

இந் நிலையில் நேற்று முன் தினம் கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் நாலக சில்வா ஆஜர் செய்யப்பட்டதையடுத்தே இவருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நாலக டி சில்வா மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளதாக, கடந்த தவணையில் சி.ஐ.டியினர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்த நிலையில், அது தொடர்பிலான சாட்சியங்களின் சுருக்க அறிக்கை சி.ஐ.டி. மனிதப் படுகொலைகள் குறித்த விசாரணை அறை பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்கவால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலேசியாவிலிருந்து இந்தியாவுக்கு மனித கருவைக் கடத்தியவர் கைது

(மும்பை)
மலேசியாவில் இருந்து மனித கருவை கடத்தி வந்த கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று புதன் கிழமை காலை மும்பையில் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மனித கருவை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவிற்கு கடத்தி வந்தமை தெரியவந்துள்ளது.

மலேசியாவில் உள்ள செயற்கை கருத்தரிப்பு மையத்தில் உறைநிலையில் வைக்கப்பட்ட மனித கருவே இவ்வாறு மும்பைக்கு கடத்தி கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இதற்கு முன்பு 10 முறை மனித கருவை, மலேசியாவில் இருந்து மும்பைக்கு சட்டவிரோதமாக கொண்டு வந்துள்ளார் என்பது முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து குறித்த நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(இ-7)

# கற்குகையிலிருந்து மாணவனின் சடலம்



நாவலப்பிட்டி- மாப்பாகந்த பிரதேசத்தில் கடந்த 5 நாட்களாக காணாமல் போனதாகக் கூறப்பட்ட, பாடசாலை மாணவனொருவன் நேற்று முன்தினம் மாலை கற்குகையொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நாவலப்பிட்டி- மாப்பா கந்த பிரதேசத்தைச் சேர்ந்த காவிந்த மதுசங்க என்ற 17 வயதுடைய மாணவன் என்றும், இவர் கடந்தாண்டு டிசெம்பர் மாதம் கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றியவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவனைக் காணவில்லையென நாவலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, பிரதேசவாசிகளுடன் இணைந்து பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையிலேயே சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# கேகாலையில் விபத்து இருவர் உயிரிழப்பு!

(கேகாலை)
கொழும்பு - கண்டி பிரதான வீதி கேகாலை கரடுபான பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பேருந்து மற்றும் சிற்றூந்து ஒன்றும் மோதுண்டமையால் குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

மேலும் இந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பங்குனி உத்தர சொற்பொழிவு

(நாவலப்பிட்டி)
கண்டி-நாட்டுக்கோட்டை நகரத்தார்- நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த பங்குனி உத்தர சிறப்புச் சொற்பொழிவு இன்று மாலை 6.30 மணிக்கு ஆலய வசந்த மண்டபத்தில் இடம்பெறும்.

சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் கா.கமலநாதன் பங்குனி உத்தர சிறப்புக்கள் எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-7)

# தாஜுடீனை நைற் றைடர் மாத்திரமே காப்பாற்றியிருக்க முடியும்- மகிந்த

(கேகாலை)
மணிக்கு 175 கிலோ மீற்றர் வேகத்தில் வந்த வாகனத்திலிருந்து வசீம் தாஜுடீனை "நைற் றைடரால்" மாத்திரமே காப்பாற்றியிருக்க முடியும் என்று முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியிலுள்ள முக்கிய தலைவர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்காக அரசாங்கம் விசேட நீதிமன்றங்களையும் கூட அமைத்திருக்கிறது என்றும் மகிந்த இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)



# கல்விக் கட்டமைப்பை அரசியலில் இருந்து மீட்க வேண்டும்

## கல்வியமைச்சர் காரியவசம்

(கொழும்பு)
கல்விக் கட்டமைப்பை அரசியலில் இருந்து மீட்க வேண்டும் எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வித் துறையின் அனைத்துப் பதவிகளும் தகைமை உடையோருக்கு விழங்குவதே தனது கொள்கையாகும் எனவும் தெரிவித்தார்.



அருகாமையுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிரிஉல்ல ரத்னாலங்கார மகா வித்தியாலயத்தின் ஆய்வு கூடம் மற்றும் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் ஆகியவற்றை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர்களுக்கான பயிற்சி மற்றும் தரமான அபிவிருத்திக்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் 1000 பேருக்கு வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளேன்.


கடந்த நான்கு வருடங்களில் தகைமையற்ற ஆசிரியர்கள் எவரையும் கல்வி கட்டமைப்பில் இணைக்கவில்லை. கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வீதத்தை இரு மடங்காக அதிகரிப்பதற்காக விடுதிகளுக்கான வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பை வழங்கும் திட்டத்தின் கீழ் 5000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன். தேசிய பாடசாலைகளுக்கு 3500 ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான பத்திரத்தை அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளேன்.

மேலும் உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ரப் கணனி இவ்வருடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் எதிர்வரும்காலங்களில் ஐந்தாம் தர மாணவர்களுக்கும் ரப் கணனியை பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலைமை ஏற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தாஜுடீன் மரணம்; மகிந்தவின் கூற்று நீதிமன்றை விமர்சிக்கும் செயல்-ரஞ்சன்





(கொழும்பு)
வசீம் தாஜுடீனின் மரணம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கருத்து நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்கும் செயலாகும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தற்போது பொய்ப்பிக்கப்பட்டு வருகின்றன என்றும் அதில் பிரதான குற்றச்சாட்டாக இருந்தது வசீம் தாஜுடீனின் கொலை என்றும் மகிந்த ராஜபக்ஷ தனியார் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாஜுடீன் செலுத்தி வந்த வாகனம் மணித்தியாலத்துக்கு 175 கிலோமீற்றர் வேகத்தில் வந்ததாகவும் அதில் இருந்த நபர் தப்புவதாக இருந்தால் அது ஆச்சரியமாகவே இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கூற்றானது இதுவரை காலமும் தெரிவிக்கப்படாததொன்றாகும். நாரஹேன்பிட்டி பார்க் வீதியில் மணித்தியாலத்துக்கு 175 கிலோ மீற்றர் வேகத்தில் நைட்ரேஸ் காருக்கும் செல்ல முடியாது.

அத்துடன் வசீம் தாஜுடீன் சம்பவம் ஒரு கொலை என நீதிமன்ற தீர்ப்பொன்று இருக்கும் நிலையில் மகிந்த ராஜபக்ஷ, இது விபத்து என்று தெரிவிப்பது நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிப்பது போலாகும் எனவும் ரஞ்சன் சுட்டிக்காட்டினார். (இ-7)

# தமிழருக்கு நீதியை நிலைநாட்டும் விடயத்தில் ஐ.நாவும் பொறுப்புக்கூற வேண்டும்!

## யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டும் விடயத்தில் ஐ.நாவும் பொறுப்புக்கூற வேண்டும் என யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை, ஐ.நா. மனிதவுரிமை பேரவை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் நிலைமாறு கால நீதி என்ற வார்த்தையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூடாகவே நாம் அறிந்தோம். போருக்குப் பின்னரான இலங்கைத் தீவிற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வழங்கிய தீர்வு அதுவாகும்.

அத்தீர்வை அமுல்படுத்துவதற்காக மனித உரிமைகள் பேரவை இதுவரை இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றது. எனவே ஐ.நாவால் முன்மொழியப்பட்ட அத்தீர்வை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு போரில் ஈடுபட்ட தரப்புக்களுக்கு மட்டும் உரியதல்ல. போரில் ஏதோ ஒரு தரப்பை ஆதரித்த எல்லோருக்கும் உரியது. அதுமட்டுமல்ல நிலைமாறுகால நீதியை முன்மொழிந்த ஐ.நாவிற்கும் உரியது. நிலைமாறு கால நீதி என்பது பிரயோகத்தில் பொறுப்புக் கூறல் என்றே விளங்கி வைத்துள்ளோம். எனவே அந் நீதியை நிலை நாட்டும் விடயத்தில் ஐ.நா.வும் பொறுப்புக் கூற வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஐ.நா. இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கி வருகின்றது. இது கால அவகாசமா அல்லது காலக்கெடுவா அல்லது கண்காணிக்கப்படுவதற்கான கால அட்டவணையா அல்லது காலம் தாழ்த்தும் உத்தியா இது. எது சரி என்பதை ஐ.நா. எங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

தங்களுடைய அறிக்கையின் பிரகாரம் அது வெறும் கால அவகாசம் அல்ல. மாறாக இலங்கைத் தீவை ஐ.நா. பொறுப்புக் கூற வைப்பதற்கான கால அட்டவணையே என்ற விளக்கமே எங்களுக்கு கிடைக்கின்றது. அதாவது இலங்கை அரசாங்கம் ஐ.நாவுடன் இணக்கத்தோடு பங்கேற்று செயற்படுவதாக தங்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் இது விடயத்தில் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலையும் ஐ.நாவின் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்தும் விதத்தில் ஐ.நா. செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இதன் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைப் பேரவை அலுவலகம் ஒன்றை இனியும் தாமதிக்காமல் இலங்கைத் தீவில் அமைக்குமாறு அரசாங்கத்தின் மீது ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும்.

30/1 தீர்மானத்தை அமுல்படுத்தும் விதத்தில் ஒரு கண்காணிப்புப் பொறிமுறையை ஐ.நா. உருவாக்க வேண்டும்.

அக் கண்காணிப்பு பொறிமுறையின் கீழ் இனி மேல் வழங்கப்படக்கூடிய எந்தவொரு கால அவகாசமும் கால அட்டவணையுடன் கூடியதாக இருக்கும் என்பதை ஐ.நா. இம்முறை உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட விடயங்களை கவனத்தில் கொள்ளாமல் நிறைவேற்றக்கூடிய எந்தவொரு தீர்மானமும் நீதியை காலம் தாழ்த்தும் ஒரு நடவடிக்கைக்கு ஐ.நாவும் உதவுகின்றதா? என்ற பாதிக்கப்பட்ட மக்களின் பயங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்துவிடும்.

எனவே கண்காணிப்பு பொறிமுறையின் கீழான கால அட்டவணை ஒன்றுதான் இலங்கை அரசாங்கத்தை ஓரளவுக்கேனும் பொறுப்புக்கூற வைக்கும். இல்லை என்றால் நிலைமாறு கால நீதி என்பது நீதியை ஒத்தி வைக்கும் ஒரு தந்திரமே எனப் பாதிக்கப்பட்ட மக்கள் முடிவெடுக்கக் கூடும்.

கடந்த நான்கு ஆண்டு காலத்தை ஐ.நாவின் நோக்கு நிலையில் நிலைமாறு கால நீதிக்குரிய காலமாக எடுத்துக் கொண்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கெல்லாம் நீதி மறுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் உதாரணங்களை எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

1. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

2. அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை.

3. காணி விடுவிப்பு முழுமை செய்யப்படவில்லை.

4. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளது.

5. பாதுகாப்பிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு எல்லா அமைச்சுக்களைவிட அதிகமாகவுள்ளது. சுகாதாரம், கல்வி ஆகிய இரண்டு அமைச்சுக்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகளின் கூட்டுத்தொகையை விடவும் அதிகமான தொகை பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

6. யுத்தத்தால் வாழ்விழந்தவர்கள் வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

7. அங்கவீனர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கவில்லை.

8. தமிழ் பகுதிகளில் தமிழர்கள் அல்லாதவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவது.

9. துறைசார்ந்த நிபுணர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாக சிற்றூழியர்களே அதுவும் வடக்கு கிழக்கிற்கு வெளியில் இருந்து நியமிக்கப்படுகின்றார்கள்.

இவை சில உதாரணங்களே. இவ்வாறு கூறத் தொடங்கினால் எமது அறிக்கை உங்களுக்கு களைப்பூட்டும் விதத்தில் எமது துயரங்களைப் போலவே நீண்டதாக அமைந்துவிடும். அதே சமயம் ஐ.நா. முன்மொழிந்த நீதியை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு ஐ.நா.விற்கும் உண்டு என்பதை அழுத்திக்கூற விரும்புகின்றோம். நீதி எனப்படுவது யாருக்கு? நீதிமன்றுக்கா? அல்லது சட்டத்தரணிக்கா? அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கா? அது பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான்.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் ஐ.நாவின் நீதியின் மீது அவநம்பிக்கை கொள்வதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு ஐ.நாவிற்கு உண்டு என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்கள் நிலைமாறு நீதியின் மீது நம்பிக்கை கொள்ளத்தக்க விதத்தில் இவ்வாறு ஐ.நா. தீர்மானம் அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஒரு கிலோ கஞ்சாவுடன் 'கடுவலை பபி' நேற்றுக் கைது

பாதாளக் குழுவொன்றின் தலைவரான, அங்கொட லொக்காவின் சகாவான "கடுவலை பபி"பொலிஸ் விசேட படையணியால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இவரிடமிருந்து ஒரு கிலோகிராம் கேரளா கஞ்சாவையும் பொலிஸ் விசேட படையணியினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 180 | 140 | 200 |
| தக்காளி | 60 | 50 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 120 | 90 | 60 |
| கோவா | 60 | 60 | 60 | 50 | 60 |
| கரட் | 80 | 80 | 80 | 80 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 80 | 70 | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 70 | 120 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 80 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 160 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | — | 40 | 80 |
| பயற்றங்காய் | 160 | 140 | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 90 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | 50 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 70 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 70 | 80 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 100 | 80 |

# செய்தித்துளிகள்

## ஜோன்ஸ்டன் விடுதலை!



(கொழும்பு)

அமைச்சராக பதவி வகித்த 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சொத்து பொறுப்புக்களை வெளிப்படுத்தவில்லை எனக் குற்றம் சுமத்தி முன்னாள் அமைச்சரும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு வழக்குகளில் இருந்தும் அவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

ஏற்கனவே இதனையொத்த வழக்கொன்றிலிருந்து அவர் நிரபராதி என விடுவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, வழக்குத் தாக்கல் செய்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு, குறித்த நான்கு வழக்குகளையும் வாபஸ் பெறுவதாக அறிவித்த நிலையிலேயே கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை விடுதலை செய்தது. (இ-7)

## ஐ.தே.க. உறுப்பினர் மீது துப்பாக்கிச்சூடு

பெலியத்த பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் கப்பில பிரியதர்சன அமரகோன் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். பெலியத்த, மோதரவான பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்தே நேற்றுக்காலை குறித்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப பட்டுள்ளது.

இதனால் காயமடைந்த கப்பில பிரியதர்சன சிகிச்சைக்காக தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## கடலில் மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

நாயுடன் கடலில் நீராடச் சென்றவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையோரத்தில் மீட்கப்பட்ட இச் சடலம் ஆரையம்பதி -2 செல்வா நகரைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான லோகேஸ்வரன் (வயது 49) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (இ-7)

## மகிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு ஜூலை 4 ஆம் திகதி



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஜூலை மாதம் 4 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தம்மிக கனேபொல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கை ஜூலை மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கீழ் இயங்குகின்ற ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த போது அந்த தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 39 இலட்சம் ரூபா நிதியை தவறாக பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மஸ்கெலியாவில் பதற்றம்; அதிகளவு பொலிஸார் குவிப்பு

(மஸ்கெலியா)


மஸ்கெலியா பிரதேச சபையால், சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகைக்கு விசமிகள் சிலர் தார் ஊற்றிய சம்பவத்தையடுத்து, அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், நோர்வூட் பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளதுடன், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். பெயர்ப் பலகையை சீரமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




அரசாங்கத்தின் இந்தப் பிரமாண்டமான முயற்சி நிலத்தை விலைக்கு வாங்கிப் பயிர்செய்ய தமிழ்மக்களுக்கு வாய்ப்புக்களை வழங்கியது. நீர்ப்பாசன வசதி வடக்கிலே நெற்பயிர்ச் செய்கையை மேலும் பொருளாதார ரீதியாகச் சாத்தியமாக்கி தமிழர்களை செல்வந்தர்களாக்க உதவியது. நெற்செய்கையினால் மாத்திரமன்றி வேறு பலவழிகளிலும் தமிழர் செல்வம் சேர்த்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் உயர் மட்டத்தினரால் ஊக்குவிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தீபகற்பத்துத் தமிழர் மேற்சொன்ன பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து நெல், தென்னை, வேறு விவசாயப் பயிர்கள் என்பனவற்றைச் செய்கை பண்ண ஆரம்பித்தனர்.

இதனால் இவர்கள் செல்வம் பெற்றதுமன்றி இவர்களது இடப்பெயர்வு சனநெரிசல் மிகவும் அடர்த்தியாய் உள்ள யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகை குறையவும் உதவியது. நெற்செய்கையையும் ஏனைய சிறு விவசாய உற்பத்தியையும் மேம்படுத்துவதற்காகத் தமிழ் உயர் மட்டத்தினர் 1887 இல் யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தகக் கம்பனியை உருவாக்கினர்.

இந்தக் கம்பனியில் பங்குகளை வாங்குவதற்குத் தமிழர் ஊக்குவிக்கப்பட்டனர். இதற்குப் பதிலாக கம்பனி உதவி தேவைப்பட்ட தமிழருக்குப் புதிதாக அபிவிருத்தியடைந்த இந்தப் பிரதேசங்களில் விவசாய செயற்பாடுகளுக்கு உதவியது.

தமிழர் ஒட்டுமொத்தமாக நலன் பெறவேண்டும் என்பதற்காக ஆறுமுகநாவலர் இம் முயற்சியில் முழுமையாக ஈடுபட்டு இக்கம்பனியில் தமிழர் அங்கத்தவர்களாவதுடன் பங்குகளை வாங்க வேண்டுமென்றும் தூண்டினர். தமிழ்ப் பத்திரிகையான இலங்கை நேசனை இந்தப் பிரசாரத்திற்கு அவர் பயன்படுத்தினார்.

தமிழருக்கான இந்தப் பொன்னான வாய்ப்பில் பங்குபற்றுங்கள்! அரிய சந்தர்ப்பம்! அரிய சந்தர்ப்பம்! யாழ்ப்பாணத்தவர்க்கு... நெற்செய்கைக்கான இந்த வாய்ப்பை இப்போதே நீங்கள் பயன்படுத்தாவிடின் பின்னர் நீங்கள் வருந்த நேரிடும்!

> நெற்செய்கையினால் மாத்திரமன்றி வேறு பலவழிகளிலும் தமிழர் செல்வம் சேர்த்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் தமிழ் உயர் மட்டத்தினரால் ஊக்குவிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தீபகற்பத்துத் தமிழர் இடம்பெயர்ந்துநெல்,தென்னை, வேறு விவசாயப் பயிர்கள் என்பனவற்றைச் செய்கை பண்ண ஆரம்பித்தனர்.இதனால் இவர்கள் செல்வம் பெற்றதுமன்றி இவர்களது இடப்பெயர்வு சனநெரிசல் மிக வும் அடர்த்தியாய் உள்ள யாழ் ப்பாணத்தின் மக்கள் தொகை குறையவும் உதவியது

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

யாழ்ப்பாணத் தமிழர் இதனை மனதிற் கொண்டார்கள். 1877 டிசெம்பர் 15 ஆம் திகதியன்று நாவலர் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இதற்கு 400 பேரளவில் சமுகமளித்தனர்.

இதில் பங்குபற்றியோருக்கு நாவலர் கம்பனியின் நோக்கங்களையும் அதனால் ஏற்படக் கூடிய நலன்களையும் விளக்கி உரைத்ததன் பயனாகத் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கான பங்குகளை வாங்கினர்.

நாவலர் தானே 200 இற்கும் அதிகமான பங்குகளை வாங்கினார் என்பது கவனத்திற்குரியது. தனது நம்பிக்கையின் வலுவை தமிழ் மக்களுக்குப் புலப்படுத்துவதற்காக நாவலர் இவ்வாறு செய்திருக்கலாம்.

பொருளாதார சுபீட்சத்தை நாடி பல தமிழ்ச் செல்வந்தர்களும் சாதாரண தமிழரும் (கூலியாட்கள் உட்பட) இப்புதிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்களுக்குச் சென்றனர்.

1871, 1901 குடிசனமதிப்புகள் இந்த மக்கள் இடப்பெயர்வுகளுக்குச் சான்றாக உள்ளன.

மேலும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் நெற்செய்கையினால் கிடைக்கும் வருமானம் சம்பந்தமான 1895 ஆம் ஆண்டுப் புள்ளிவிபரங்களை 1864 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் வருமானம் வீழ்ச்சியடைவதைக் காட்டுகின்றது.

1895 இந்து ஓகனில் வெளியான வடமாகாண நிர்வாக அறிக்கையின்படி நெல் உற்பத்தி விபரங்கள் வருமாறு,

மாகாணத்தின் மொத்த நெல் உற்பத்தி 667,000 புசல்களாகும். இது யாழ்ப்பாணத்தில் 500,000 புசல்களும் மன்னாரில் 63,000 புசல்களும் முல்லைத்தீவில் 56,000 புசல்களும் வவுனியாவில் 48,000 புசல்களுமாகும்.

1898 வெளியிடப்பட்ட மேலுமோர் அரசாங்க நிர்வாக அறிக்கை 1895 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வன்னிப் பிரதேசத்தில் நெற்செய்கை குறிப்பிடக்கூடிய அளவு அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

| பிரதேசம் | நெல் உற்பத்தி (புசல்களில்) |
|---|---|
| மன்னார் | 104600 |
| முல்லைத்தீவு | 63406 |
| வவுனியா | 92900 |

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை குறைந்தபோது அது ஏனைய இடங்களில் அதிகரித்துள்ளதை இது தெளிவாகக் காட்டுகின்றது. மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடம்பெயர்ந்த காரணத்தினால் இது இவ்வாறிருந்திருக்கக்கூடும்.

இதற்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் புகையிலைக்கு ஏற்பட்ட கிராக்கி யாழ்ப்பாணத் தீபகற்பத்துத் தமிழரை சிரமம் தரும் நெற்செய்கையை விடுத்து புகையிலைச் செய்கையில் கவனம் செலுத்த வைத்தது.

நிலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே இருந்தமையும் தீபகற்பத்தில் நெற்செய்கை வீழ்ச்சியடைந்தமைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். யாழ்ப்பாணம் கிழக்கு மாகாணத்திலிருந்து அதிகமாக நெல்லை இறக்குமதி செய்யலாயிற்று.

(தொடரும்)

# திடீரென தீப்பிடித்த ஆட்டோ





(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டியிலிருந்து தலவாக்கலை நோக்கிப் பயணித்த ஆட்டோ ஒன்று நாவலப்பிட்டி தலவாக்கலை பிரதான வீதியின் கடியஞ்சேன பகுதியில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பயணிகள் இருவரை ஏற்றிச் சென்ற் போதே குறித்த ஆட்டோ தீப்பற்றி எரிந்துள்ளது.

ஆட்டோவில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே குறித்த தீப் பரவலுக்கு காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஆட்டோவில் பயணித்த மூவருக்கும் எதுவித பாதிப்புக்களும் ஏற்படாத போதிலும் ஆட்டோ முற்றாகத் தீக்கிரையானது. (இ-7)

# தமிழர்களை அரசியல் தோல்விக்குள் தள்ளிவிடவே கூட்டமைப்பு முயற்சி

## டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சர்வதேசத்தை நம்புவதை விடவும் தமிழ் மக்களுக்கு வேறு வழி இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருப்பது அவரது அரசியல் தோல்வியையும், இயலாத்தனத்தையுமே வெளிக்காட்டுகின்றது.

சர்வதேசத்தைத்தான் தமிழ் மக்கள் நம்பவேண்டும் என்றால், அதில் இடைத்தரகர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இருக்கவேண்டும். அரசுக்கு முண்டு கொடுத்து தமது சுயலாபங்களை பெற்றுக்கொள்ளும் கூட்டமைப்பு தமிழ் மக்கள் சர்வதேசத்தைத்தான் நம்பவேண்டும் என்று கூறுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பிரேரணைக்கு காலவரையறையற்ற காலக் கெடுவைப் பெற்றுக்கொடுப்பதற்கு தரகு அரசியல் செய்து கொண்டு அரசுக்கு முண்டு கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தன்னெழுச்சியாக நடத்தும் அரசுக்கு காலக்கெடு வழங்கக்கூடாது என்ற போராட்டங்களிலும் முன் வரிசையில் கலந்து கொண்டு அந்தப் போராட்டத்திற்கும் தாம் ஆதரவு வழங்குவதாக காட்டிக் கொள்கின்றனர்.

அடுத்த பொங்கலுக்குள் தீர்வு என்றும், அடுத்த தீபாவளிக்குத் தீர்வு என்றும், மே தினத்திற்கு முன்னர் தீர்வு என்றும், சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு என்றும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு போக்குக் காட்டும் அரசியலை முன்னெடுத்து அதற்கான சலுகைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொண்ட சம்பந்தன், இப்போது தமிழ் மக்களுக்கு சர்வதேசத்தை விட்டால் வேறு வழியில்லை என்று சர்வதேச பிரதிநிதிகளிடம் கூறி வருகின்றார்.

தமிழ் மக்களை அந்தக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று முன்னர் கையை விரித்தவர்களின் வழித்தோன்றல்களாக அரசியலில் ஈடுபட்டவர்கள், தமக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து பலப்படுத்தினால், தாமே இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணத்திற்குள் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத் தருவதாகவும், சர்வதேச சமூகத்தை அழைத்துவந்து நீதியைப் பெற்றுத்தருவதாகவும் ஒவ்வொரு தேர்தல்களிலும் கூறியவர்கள் இப்போது தமக்கு தேவையான சலுகைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர், தமிழ் மக்களுக்கு சர்வதேசத்தை விட்டால் வேறுவழியில்லை என்று கூறுகின்றார்கள்.

போலியான தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு, சுயலாப அரசியல் நடத்துவோர் தாமும் தோற்றுப்போய், தமிழ் மக்களையும் அரசியல் ரீதியாக தோல்வியடைச் செய்யவே முற்படுகின்றார்கள். இத்தகையவர்களின் கபடத்தனத்தை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு அவர்களை முற்றாக நிராகரித்து எதிர்காலத் தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்றும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1675

### சுரேஸ்



மனிதர்களே
மனிதர்களே
என்
விதையை
ஒருமுறை
மண்ணில்
விதைத்து
விடுங்கள்.
மூன்று
தலைமுறைக்கு
உங்களுக்கு
நான் விருந்து
அளிக்கிறேன்


### காவேரி

நீ சிறியவனாக இருந்தாலும் உன்
எண்ணங்களை உயர்வாக்கு



### உமையாள்

அவர்களால் உங்களுக்கு உதவ
முடியாவிட்டாலும் பிறருக்கு உதவுங்கள்




### ராகவ்

இன்றைய உலகம்
உழைப்பவன் ஒதுக்கப்படுகிறான்...
நடிப்பவன் மதிக்கப்படுகிறான்...
ஏமாற்றுபவன் பாராட்டப்படுகிறான்



### சந்திரன்

நீங்கள் உடைந்த போன அந்த நிமிடங்களே
உங்களை உருவாக்கிய நிமிடங்கள்




### இளங்கோ

ஆண்கள் தினமாம்மா...?
அது வீட்டுக்காரம்மா வெளியூருக்குப்
போயிருக்கும் போது நாங்களே வீட்டில
சத்தமில்லாமல் கொண்டாடிக்குவோமா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1



09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

காணிக்கச்சேரி நடத்தப்பட்ட பின்னர் காணியற்ற விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு மாகாண காணி ஆணையாளருக்கு சிபாரிசுக்காக அனுப்பப்படும். காணி ஆணையாளரின் அனுமதியின் பின் தகைமை பெற்ற பயனாளிகளுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலின் கீழ் கிராம அலுவலர் செய்ய வேண்டிய கடமைகள்**

- காணிகள் அற்றவர்களை வருடாந்தம் பதிவு செய்தல், விண்ணப்பப் படிவங்களை அத்தாட்சிப்படுத்துதல் மற்றும் தகைமையுடையவர்களை பதிவு செய்வதற்கு உதவுதல்.
- காணிக் கச்சேரிகளை நடத்துவதற்கான ஒத்துழைப்புகளை வழங்குதல்.
- சரியான காணி பகிர்வாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான தகவல்களை வழங்குதல்.
- காணிகளின் எல்லைகளை கவனித்தலும், காண்பித்தலும்.
- எல்லைகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.
- அனுமதிப்பத்திரங்களை பெற்றவர்கள் நிபந்தனைகளுக்கமைய செயற்படுகின்றனரா என மேற்பார்வை செய்தல்.
- அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்யும் நடவடிக்கைகள்.
- அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அளிப்புப்பத்திரங்களின் பின்னுரிமையாளர்களை பெயர் குறித்தல், இரத்து செய்தல், அடகு வைத்தல் என்பவற்றுக்கான தகவல்களையும், பரிந்துரைகளையும் வழங்குதல்.
- அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அளிப்பு பத்திரங்களை கொண்டிருப்போர் தொடர்பான தகவல்களை ஒன்றுதிரட்டி வைத்திருத்தல்.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி ஒன்றை அன்பளிப்பாக (grant) பெறத் தகைமை**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று (permit) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- வழங்கப்பட்ட காணி பிரதேச செயலாளரால் திருப்திப்படும் வண்ணம் அபிவிருத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- காணிக்கு நில அளவை அத்தியட்சகரின் வரைபடம் பெறப்பட்டிருக்க வேண்டும்.
- குடியிருப்பிற்கு வழங்கப்பட்ட காணியாயின் ஒரு வருடத்திற்கு மேலும் நீர்பாசன காணியாயின் இரு வருடத்திற்கு மேலும் திருப்திப்படும் வண்ணம் அபிவிருத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நபர் குறித்த காணியில் குடியிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் பிரதேச செயலகமூடாக ஆவணம் தயாரிக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளரின் அனுமதியுடன் ஜனாதிபதி காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஜனாதிபதியால் காணிக்கான அளிப்பு ஒப்பமிடப்படும்.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்பு ஆவணம் ஒன்றை கைமாற்றுதல் (grant transfer)**

- காணியொன்றை பெற்ற பயனாளி அக்காணியை பராமரிப்புச் செய்ய முடியாத நிலையிலோ (உ-ம்:- வயோதிபத்தினால்) அல்லது தனது இரத்த உறவுகளுக்கு காணித்துண்டொன்றை வழங்க வேண்டியேற்படினோ அல்லது மரணித்தாலோ காணியொன்று கைமாற வேண்டிய நிலை ஏற்படும்.
- அளிப்பு ஆவணமானது குறித்த காணி அளிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரமே கைமாற்ற முடியும்.
- காணி உரிமையாளர் தனக்கென ஒரு பகுதியை வைத்துக் கொண்டே அளிப்பாவணத்தை பிரிக்க முடியும். (நிபந்தனையில் பிரிக்கக்கூடிய காணியென குறிப்பிடப்பட்டிருப்பின்)
- அளிப்பாவணமானது 3ஆம் அட்டவணையில் (கீழே பார்க்கவும்) குறிப்பிடப்பட்டுள்ள இரத்த உறவுகளுக்கே மாற்றம் செய்ய முடியும்.
- **3ஆவதுஅட்டவணை**

இது 12 இரத்த உறவுகளுக்கே சட்டத்தின் மூலம் ஏற்புடையதாக உள்ளது.

மகன், மகள், பேரன், பேத்தி, தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மாமா, மாமி, உடன் பிறந்தவரின் மகன், உடன் பிறந்தவரின் மகள்.

- உறவினர் எனப்படுவது திருமணம் மூலம் ஏற்படும் உறவினர் அன்றி இரத்த உறவு எனக் கருதப்படும்.

**தகைமைகள்**

- மாற்றிப் பெறுபவர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- குடியிருக்க காணித் துண்டொன்று அற்றவராக இருத்தல் வேண்டும்.
- அளிப்பாவணம் உள்ளவரின் இரத்த உறவினராக இருத்தல் வேண்டும்.
- வருமானம் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

காணிக்கான அளிப்பை பெற்ற நபர் உயிருடன் இருக்கும் போது தான் விரும்பிய இரத்த உறவினர் ஒருவருக்கு காணித்துண்டின் ஒரு பகுதியை வழங்க முடியும். மேலும் தான் உயிருடன் வாழும் போதே இரத்த உறவுள்ள ஒருவரை முழுக்காணிக்கும் பின்னுரித்தாளியாக நியமனம் செய்யவும் முடியும்.

மேற்குறித்த தகைமையை பூர்த்தி செய்த நபர்கள் கீழ்வரும் ஆவணங்களுடன் பிரதேச செயலாளரை அணுகல் வேண்டும்.

- மாற்றிக் கொடுப்பவர் மற்றும் மாற்றிப் பெறுபவரின் அடையாள அட்டை பிரதி.
- மாற்றிக்கொடுப்பவர் மற்றும் மாற்றிப் பெறுபவரின் பிறப்புச் சான்றிதழ் பிரதி.
- கிராம அலுவலரின் சான்றிதழ்.
- அளிப்பின் மூலப் பிரதி.
- காணிக்கான வரலாற்றுத்தாள். (தேவையேற்படின்)

பின்னர் பிரதேச செயலாளரால் காணி மாற்ற அனுமதி வழங்கப்படும்.

குறிப்பு :-

1. காணி உரிமையாளர் மரணிக்கும் போது அவர் அக்காணிக்கு பின்னுருத்தாளியை நியமித்து வைத்திருப்பாராயின் அவர் பெயருக்கு அனுமதிப் பத்திரத்தை மாற்றிக் கொடுக்க முடியும். இவ்வேளையில் கணவன் அல்லது மனைவி உயிருடன் இருந்தால் அவருக்கு சீவிய உரித்து மூலம் காணியை மாற்றிக் கொடுக்கவும் முடியும்.
2. காணி உரிமையாளர் பின் உரிமை பதிவு செய்யாத வேளையில் உரிமையாளரின் 3ஆவது அட்டவணையில் குறிக்கப்படும் ஒருவருக்கு ஏனையோரின் சம்மதத்துடன் காணி மாற்றம் செய்து கொடுக்க முடியும்.
3. இச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் காணி விற்பனை செய்ய இயலாது.

**➢ நடுத்தர வகுப்பு அளிப்புப் பத்திரம்**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் இலங்கையில் வாழும் விவசாய, குறை வருமான, அதிக வருமான மற்றும் கற்றறிந்த இளைஞர்கள் ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த நபர்களுக்கு விவசாய நடவடிக்கைக்காக அல்லது வதிவிட நிமித்தம் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது அந்த இரண்டு நோக்கங்களுக்கும் இதன் மூலம் காணிகள் வழங்கப்படும். இந்த விடயங்கள் தவிர்ந்த எந்த நோக்கங்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட மாட்டாது. அளிப்புப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு அரசுக்குச் சேர வேண்டிய கட்டணத்தை முற்றாகச் செலுத்தியும் காணி நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டு இருத்தலும் வேண்டும்.

**➢ காணி அற்றோருக்கான காணி வழங்கும் திட்டம் (Land for landless)**

1989ஆம் ஆண்டு ஜனாதிபதி காலஞ் சென்ற ஆர். பிரேமதாஸவின் **"Presidential Task Force"** என்ற காணி செயலாற்றுத்திட்டத்தின்படி 1,000,000 ஏக்கர் அரசகாணிகளை காணி அற்றோருக்கு பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டது. ஜனாதிபதியின் பணிக்குழு காணி இல்லாதவர்களை சிறிய வருமானமுடைய விவசாயக் குடும்பங்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் என மூன்று வகையாகப் பிரித்தது. இவ் ஒரு மில்லியன் ஏக்கர்களுள் அரச காணிகள், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான நெற்காணிகள் மற்றும் மகாவலி மேட்டு நிலக்காணிகள் போன்றவை உள்ளடங்கும்.

கூடுதலாக இக்காணி வழங்கல்கள் வடமத்திய, வடமேல், ஊவா மற்றும் தென் மாகாணங்களில் நடைபெற்றன. வழங்கலுக்கு வேண்டிய அரச காணிகள் இலங்கையில் எங்கெங்கு உள்ளன என்பதை அறிவதற்கு நிலஅளவைத் திணைக்களத்தில் உள்ள வரைபடங்களும் ஆவணங்களும் புரட்டி பார்க்கப்பட்டு ஆவணத்தில் காணப்பட்ட அரச காணிகள் எல்லாம் நிலத்தில் அடையாளம் காணப்பட்டு, அக்காணிகளின் எல்லைகள் குறிக்கப்பட்டு காணித்துண்டுகளாகப் பிரிப்பதற்கான சுவடு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அவை காணி அற்றோருக்கு பகிர்ந்தளிப்பதற்காக அவ்அவ் பிரதேச செயலாளரிடம் கொடுக்கப்பட்டன. 6 மாதகாலத்தில் 300,000 காணித் துண்டுகளுக்கான பிரித்தெடு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாறு காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்ட போதும் இத் திட்டம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் காணிகளின் பயன்பாட்டுத் தன்மை பற்றி சரியான முறையில் ஆய்வு செய்யப்படாமையேயாகும்.

காணி இல்லாதவர்கள் அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் பதில்களும். (மேற்கூறப்பட்டவற்றின் சாராம்சம்)

**➢ வசிப்பதற்கு அரச காணி ஒன்று பெற்றுக்கொள்வது எவ்வாறு ?**

நீங்கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்திற்குச் சென்று பிரதேச செயலாளரைச் சந்தித்து, தேவையான கடிதங்களைச் சமர்ப்பிக்கவும். காணி இல்லாதவர்களுக்கான பதிவு மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளுதல் மூலம் காணிக்கச்சேரி நடத்தப்படும் சந்தர்ப்பங்களில் பிரசன்னமாகி தகுதி பெறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

**➢ அனுமதியின்றி பிடித்து நீண்ட காலம் பாவிக்கப்படும் அரச காணிக்கு நிரந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியுமா ?**

தற்போது அரச காணிகளில் அத்துமீறி குடியேறியுள்ளவர்களை ஒழுங்குபடுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் நீங்கள் காணியில்லாதவராயின் புதிய காணிக் கச்சேரி முறைமையில் பதிவு செய்து அக் காணியை அல்லது அக்காணியின் பகுதியை சட்டபூர்வமாக பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் உண்டு.

**➢ அரச காணிகளின் உரிமை சின்னக்கர (அறுதிக்) காணிகளின் உரிமை போன்று முறைப்படியா? இல்லையாயின் அதனை விபரிக்குக.**

இல்லை. இதுவரை எந்த அரசும் அரச காணிக்கு, சின்னக்கரை உறுதி வழங்கியதில்லை. அரச காணிகளின் உரிமை வேறு விதமாக மாற்றப்படுகிறது.

(தொடரும்...)




# முற்பகல் செய்யின்...



ஏழை நாடோடி முதியவர் ஒருவர் ஒரு பெரிய மாளிகை முன் நின்று, "வீட்டில் யார்? கதவைத் திறங்கள். இரவு மட்டும் தங்கிச் செல்ல அனுமதியுங்கள்!" என்று கெஞ்சிக் கேட்டார். குரல் கேட்டு வெளியில் வந்தாள் ஒரு பெண். முதியவரைப் பிச்சைக்காரன் என்று நினைத்து, "அதெல்லாம் முடியாது. இடமில்லை போய்விடு!" என்று விரட்டினாள்.

முதியவர் அங்கிருந்து நடந்து, ஒரு சிறிய குடிசை வீட்டு முன்நின்று கதவைத் தட்டி முன்போலவே தங்குவதற்கு இடம் கேட்டார். ஒரு பெண்மணி வெளியில் வந்து, "வாருங்கள் ஐயா. இங்கு நீங்கள் தங்கலாம். சிறிய இடம். அதனால் சிரமம் இருக்கும். பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று வரவேற்று உபசரித்தாள். முதியவர் மகிழ்ந்தார். உள்ளே போனார். சுற்றுமுற்றும் பார்த்தார்.

ஏழைக்குடும்பம் இரண்டு மூன்று குழந்தைகள். நல்ல துணிமணி இல்லை. நைந்து கிழிந்து போனவற்றையே அக்குழந்தைகள் அணிந்திருந்தனர். பிறகு அந்தப் பெண்மணி வீட்டிலிருந்த சொற்ப உணவைக் கொண்டு வந்து வைத்து முதியவரை சாப்பிட அழைத்தாள். "என்னிடம் கொஞ்சம் உணவு இருக்கிறது. எல்லாரும் சேர்ந்து உண்ணலாம்!" என்றவாறு தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து, எல்லாருக்கும் பகிர்ந்தளித்தார் முதியவர்.

குழந்தைகள் உண்டு மகிழ்ந்தனர். மறுநாள் பொழுது விடிந்தது. தன் பயணத்தைத் தொடர்ந்த முதியவர் கிளம்பும் போது, "அம்மணி! நீ காலையில் முதன் முதலில் செய்யத் தொடங்கும்வேலை மாலையில் இருட்டும் வரை தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவருக்கு விடை கொடுத்து வீட்டு உள்ளே சென்ற பெண்மணி குழந்தைகளுக்குப் புதுச் சட்டைகள் தைக்க விரும்பினாள். அவளிடம் கொஞ்சம் புதுத்துணி இருந்தது. எல்லாருக்கும் போதுமா என்பது தெரியவில்லை. எனவே, அளந்து பார்க்கத் தொடங்கினாள். அவ்வளவுதான்! அளக்க அளக்க புதுத்துணி வளர்ந்து கொண்டே போயிற்று. அவளும் சளைக்கவில்லை. மாலைக்குள் துணி மலைபோல் குவிந்துவிட்டது. தேவையான துணியை மட்டும் வைத்துக் கொண்டு மிச்சத்தை விற்று, பொருள் ஈட்டி அதைக் கொண்டு நிம்மதியாக குழந்தைகளை வளர்க்க நினைத்தாள். அப்பெண்மணி துணியை அளக்கப் பயன்படுத்திய கோல், பக்கத்துவீட்டுப் பணக்காரியுடையது. மாலையில் அவளிடம் அதைக் கொண்டு போய் திரும்பக் கொடுத்தாள். கூடவே தன் வீட்டில் நடந்த அற்புதங்களைப் பெருமையாகக் கூறினாள். அப்போதுதான், அந்த முதியவரைத் தான் விரட்டியடித்தது அந்தப் பணக்காரிக்கு நினைவுக்கு வந்தது. அவரைத் தன் வீட்டில் தங்க அனுமதிக்காமல் போனோமே என்று வருந்தினாள். இப்போதுதான் என்ன மோசம் போய்விட்டது என்று எண்ணிய அவள் தன் குதிரை வண்டிக்காரனை அழைத்தாள். "ஓடு ஓடு! உடனே போய், அந்த கிழப்பிச்சைக்காரன் எங்கேயாவது நடந்து போய்க் கொண்டிருப்பான். அவனை மறித்து வண்டியில் ஏற்றி நம் வீட்டுக்கு உடனே அழைத்து வா!" என்று அவனை விரட்டியடித்தாள்.

அதற்குள் கிழவர் நீண்ட தூரம் போய்விட்டார். அவரை அணுகிய வண்டிக்காரன், "ஐயா, என் எஜமானி உங்களைக் கையோடு அழைத்துவரச்சொல்லி வண்டி அனுப்பியிருக்கிறார்!" என்றான். முதியவருக்குத் திரும்பிச் செல்ல விருப்பமில்லை. வர மறுத்தார். ஆனால், வண்டிக்காரனோ விடுவதாக இல்லை.

"ஐயா! என் எஜமானி மிகவும் கோபக்காரி. நான் மட்டும் தனியாகத் திரும்பிச் சென்றால் என்னை வேலையை விட்டே நிறுத்தி விடுவாள். எனவே தயவு செய்து என்னுடன் வாருங்கள்!" என்று கெஞ்சினான். முதியவருக்குப் பாவமாக இருந்தது. வண்டியில் ஏறிக் கொண்டார். பணக்காரி அவரை வணங்கி வரவேற்றாள். உள்ளே அழைத்துப் போனாள். சிறப்பான அறுசுவை உணவுகளை வழங்கினாள். மிருதுவான பஞ்சுமெத்தை ஒன்றை விரித்துப் போட்டு, "முதியவரே, நிம்மதியாக இதில் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கேட்டுக் கொண்டாள்.

அதிகாலையில் துயிலெழுந்த முதியவர் தனது பயணத்துக்கு ஆயத்தமானார். அதற்குள் பணக்காரிக்கு அவசரம்.

"சொல்லுங்கள் முதியவரே! இன்று நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டாள். அதற்கு அந்த முதியவர், முதல் நாள் அந்தப் பெண்ணிடம் கூறியது போலவே, "அம்மணி! நீ காலையில் முதன் முதலில் செய்யத் தொடங்கும் செயல், நிற்காமல் மாலையில் இருட்டும் வரையில் தொடர்ந்து கொண்டே இருக்கும்!" என்றார்.

அவ்வளவுதான்! அடுத்த கணம், அந்த பணக்காரி முதியவருக்கு விடை கொடுப்பதைக் கூட மறந்து விட்டாள். வீட்டுக்குள் ஓடினாள். புதுத் துணி ஒன்றை அளப்பதற்கு அளவுகோலை எடுத்துக்கொண்டாள். புதிய லினன் துணி அடுத்த அறையில் இருந்தது. அதைக் கொண்டு வர ஓடலானாள். அந்த நேரம் பார்த்து அவள் கால்களில் ஒரு கோழி சிக்கிக் கொண்டது. அவள் தடுமாறினாள். துணியை அளக்க வேண்டியதை மறந்தாள். சினத்துடன் கோழியை அடிக்க அளவுகோலை ஓங்கிக் கொண்டு ஓடினாள். அவள் செய்த அந்த முதல் செயல், அவளைத் தொற்றிக் கொண்டு விட்டது.

பாவம்! மாலை வரையில் கன்னாபின்னா என்று திட்டிக் கொண்டே, அளவு கோலை ஓங்கியவாறு கோழியைத் துரத்தித் தடுமாறிக் கீழே விழுந்து புரண்டு, எழுந்து, மீண்டும் விழுந்து. மீண்டும் எழுந்து ஓடிக் கொண்டே இருந்தாள்.

அந்தப் பேராசை பிடித்த பணக்காரிக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது.

## பழமொழிகளும் விளக்கமும்

• சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்

**பொருள்:-**

சட்டியில் என்ன (சோறு) இருக்கிறதோ அது தான் நமக்கு கிடைக்கும்.

**உண்மையான பொருள்:-**

சஷ்டியில் விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை வரும்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் கந்தர் சஷ்டியில் விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை உருவாகும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

• ஆறிலும் சாவு நூறிலும் சாவு.

**பொருள்:-**

ஆறு வயதிலும் சாவு வரும் நூறு வயதிலும் சாவு வரும்.

**உண்மையான பொருள்:-**

மகாபாரதத்தில் கர்ணன், பஞ்ச பாண்டவர்கள் (ஐவர்) பக்கம் இருந்தாலும் கௌரவர்கள் (நூறு பேர்) பக்கம் நின்றாலும், போரின் போது இறப்பு வரும். ஆதலால் துரியோதனன் மீதுள்ள நட்பின் காரணமாக கௌரவர்களிடமே இருக்கிறேன் என்று சொன்னது.

## அம்மா இங்கே வா வா!

அம்மா இங்கேவா! வா!
ஆசை முத்தம் தா! தா!
இலையில்சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற
நல்லார்.
ஊரில் யாவர் உள் ளார்?
என்னால் உனக்குத்
தொல்லை
ஏதும் இங்கே இல்லை
ஐயமின்றி சொல்லுவேன்
ஒற்றுமை என்றும்
பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன
மொழியாம்
அஃதே எனக்கு
வழியாம்.

## பொது அறிவும் விடைகளும்

• கிருஷ்ணா நதியில் பாயும் மிகவும் முக்கியமான கிளைநதி?

**துங்கபத்ரா நதி**

• 1600 ஆண்டுகளுக்கு முன் அணை எந்த நதியில் யாரால் கட்டப்பட்டது?

**கல்லணை, கரிகாலனால், காவிரியின் குறுக்கே கட்டப்பட்டது**

• லட்சுமி நாராயணி தங்கக் கோவில் எங்குள்ளது?

**வேலூர் ஸ்ரீபுரம்**

• International Air Transport Association IATA – தலைமையகம் எது?

**ஜெனிவா**

• நிரங்கரி – என்பது என்ன ?

**சீக்கிய மதப்பிரிவு**

• ஐரோப்பிய மொழிச்சொற்களை வைத்து உருவாக்கப்பட்ட எஸ்பெரொண்டோ (ESPERANTO) மொழியை உருவாக்கியது யார்?

**லஸாரஸ் லூட்விக் ஸாமெனாஃப்**

நாம் விரும்பும் பொருள் நம்மிடம் இல்லாதபோது நம்மிடம் இருக்கும்பொருளை நாம் விரும்பவேண்டும்.
– புஸ்ஸீரபுடின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேசியப் பாடசாலையாக்குவது பொருத்தமற்ற செயற்பாடாகும்

வடக்கு மாகாணத்திலுள்ள 14 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலைகளின் பழைய மாணவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க வடக்கிலுள்ள 14 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்குவற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுக்கவுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

உண்மையில் வடக்கிலுள்ள பிரபலமானதும் மாணவர் தொகை அதிகமானதுமான மாகாணப் பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக ஆக்குவதென்பது மாகாணப் பாடசாலைகளை வலுக்குறைப்பதாகவும் மாகாணக் கல்வி நிர்வாகத்தைப் பலயீனப்படுத்துவதுமாகவே இருக்கும்.

தேசிய பாடசாலைகளாக ஆக்குவது மிகுந்த நன்மை தரும் என்ற பிரமை குறித்த சில பாடசாலை சார்ந்தவர்களிடம் இருக்கவே செய்கிறது.

இது மிகப்பெரிய தவறு மட்டுமன்றி, மாகாண சபைக்கு அதிகாரம் வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை அர்த்தமற்றதாக்குவதுமாகும்.

பொதுவில் மாகாண சபைக் கட்டமைப்பு என்பது அந்தந்த மாகாணங்கள் தமது ஆட்சி அதிகாரத்துக்குள் ஒரு சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தி அந்தந்த மாகாணங்களை அபிவிருத்தியடையச் செய்வதாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், வடக்கு மாகாணத்திலுள்ள பிரபலமான பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்கி மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் அவற்றைக் கொண்டு வரும்போது; அதிபர் நியமனம், ஆசிரியர் நியமனம் மற்றும் ஆசிரிய இடமாற்றம் என அனைத்துக்கும் மத்திய அரசை எதிர்பார்த்திருக்கின்ற சூழ்நிலை ஏற்படும்.

தவிர, தேசிய பாடசாலைகள் மீதான மாகாணக் கல்வி அமைச்சின் மேற்பார்வையும் கட்டுப்பாடுகளும் தவிர்க்கப்படுவதால், மாகாண – தேசிய பாடசாலைகள் என்ற பாகுபாடுகள், பேதமைகள் ஒரே மாகாணத்தில் எழுகை பெறும்.

இது கல்வி அபிவிருத்திக்குப் பெரும் குந்தமாக அமையும்என்பதுமறுக்கமுடியாதஉண்மை.

இதற்கு மேலாக, வடக்கு மாகாணத்தில் முதன்மையானதும் அதிக மாணவர்கள் கற்கின்றதுமான 1AB பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக ஆக்கிய பின்னர், மிகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளுடன் மட்டுமே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இயங்குநிலை இருக்கும்.

இஃது வடக்கு மாகாண சபையின் அதிகாரத்துக்குச் சவாலாக அமையக்கூடிய சூழலை ஏற்படுத்துவதாகவும் அமையும்.

எனவே குறித்த 14 பாடசாலைகளையும் தேசிய பாடசாலைகளாக ஆக்காமல், அவற்றை மாகாணப் பாடசாலைகளாக வைத்துக் கொண்டு அவற்றையும் ஏனைய பாடசாலைகளையும் தரமான பாடசாலைகளாக ஆக்குவதற்கு வடக்கின் ஆளுநர் நடவடிக்கை எடுப்பாராக இருந்தால், அது வடக்கின் கல்வி அபிவிருத்திக்குப் பெருந்துணையாக இருக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

## விபத்தில் சிக்கிய இளைஞனை மருத்துவமனையில் சேர்த்த சாவகச்சேரி நீதிபதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் - கைதடி வீதியில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த இளைஞரை மீட்டு மருத்துவமனையில் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் சேர்த்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் கோப்பாய்-கைதடி வீதியில் மோட்டார் சைக்கிளும், பட்டா ரக வாகனமும் விபத்துக்கு உளளான போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திய கோப்பாய் வடக்கை சேர்ந்த 34 வயதான சின்னத்தம்பி வசந்தன் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில். இவ்வீதியூடாக சாவகச்சேரி நீதிமன்றுக்கு கடமைக்கு சென்ற நீதவான் விபத்தில் காயமடைந்த இளைஞனை மீட்டு தனது காரில் ஏற்றி சென்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு பின் கடமைக்கு சென்றுள்ளார் என விபத்து இடம்பெற்ற பகுதியில் நின்றவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## மாநகர முதல்வர் ஆனல்டுக்கு அலைபேசியில் அச்சுறுத்தல் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்டுக்கு அலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பன் விழாவுக்குச் செல்ல வேண்டாம் எனவும் தமது எச்சரிக்கையை மீறிச் சென்றால் அங்கு வைத்துக் கொலை செய்வோம் எனவும் தனக்கு அலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி தனது அலைபேசிக்கு அழைப்பு எடுத்த நபர், இந்தக் கொலை மிரட்டலை விடுத்தார் என்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் மாநகர முதல்வர் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். அத்துடன், தொலைபேசி இலக்கத்தையும் அவர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (ம-3,10,101)

## இலவச மருத்துவ முகாம்

நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 15 நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை (23.03.2019) காலை 8.30 மணிக்கு மன்ற கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில, குருதியில்கொழுப்பு அளவு பரிசோதனை, குருதியில் சர்க்கரை அளவு பரிசோதனை, சிறுநீரில் புரதம் வெளியேறுவதற்கான அளவை பரிசோதித்தல், கண்ணில் குறைபாடு உடையோருக்கு பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (ம-78)

## வைத்தியசாலை தரமுயர்கின்ற போதிலும் ஆய்வுகூடப் பரிசோதனைகள் வெளியில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமரவின்போது உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக நகரசபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுகாதார நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. குறிப்பாக நோயாளர் விடுதிகளில் உள்ள மலசலகூடங்கள் பயன்படுத்த முடியாத நிலையில்காணப்படுகின்றன. வைத்தியசாலை ஊழியர்கள் மலசலகூட சுத்திகரிப்பை சரியான முறையில் செய்வதில்லை. அத்துடன் ஆண் நோயாளர் விடுதியில் சில மலசலகூடங்களின் கதவுகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன. மேலும் அண்மையில் விபத்து காரணமாக ஒருவரை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும்அவரை வைத்தியர் வந்து பார்வையிட சில மணி நேரங்கள் ஆகியது. வைத்தியசாலையின் தரம் உயர்கின்ற போதிலும் இன்றுவரை இரத்தப் பரிசோதனையை தனியார் ஆய்வுகூடங்களில் பணம் கொடுத்து செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

இவ்வாறு வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகளை பொது மக்கள் தெரிவிக்க வைத்தியசாலையில் நலன்புரி அமைப்புக் காணப்பட வேண்டும். ஆனால் அந்த நலன்புரி அமைப்பு மக்கள் பார்வைக்கு இலகுவானதாகவும், குறைபாடுகளைத் தெரிவிக்க வசதியானதாகவும் இருக்க வேண்டும் என சபை உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

உறுப்பினர்களின் கருத்திற்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்க உறுப்பினரும் நகர சபை உறுப்பினருமான யோ.ஜெயக்குமார் பதில் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வைத்தியசாலைகளுக்கு தனியார் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பின்னர் சுகாதாரத் திணைக்களம் நிதிப்பற்றாக்குறை காரணமாக குறித்த தனியார் நிறுவன தொழிலாளர்களை இடைநிறுத்தியது. மலசலகூட விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் -நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் இடையில் முரண்பாடு நிலவுகிறது. ஆதார வைத்தியசாலை மலசலகூடங்கள் பல முழுமையாகத் திருத்த வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

மலசலகூடங்களைத் திருத்தி நோயாளர்களின் இடர்களைப் போக்க வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் முயற்சி எடுத்து வருகின்றது. இனி வரும் நாட்களில் சாவகச்சேரி வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக வைத்தியசாலையில் உள்ள முறைப்பாட்டுப் பெட்டியிலும் நோயாளர் நலன்புரிச் சங்கத்திலும் தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-30)

## ஒட்டுசுட்டானில் சூரியப்பெருவிழா

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு விழா சிறப்பாக ஒட்டுசுட்டானில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரியப்பெருவிழா-2019 என்ற பெயரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பகுதியில் நிலைகொண்டுள்ள 64ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள புத்தாண்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக 64 ஆவது படைப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அன்று நடைபெறும் தமிழ்-சிங்கள புத்தாண்டு சூரியப்பெருவிழாவில் மக்கள் இடையில் போட்டிகள் நடத்தப்பட்டு பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிஸ் உண்ணுதல், கண்கட்டி பால் ஊட்டல், யானைக்கு கண் வைத்தல், மரதன் ஓட்டம், பலூன் உடைத்தல், மிதிவண்டிஓட்டம், தடைஓட்டம், சங்கீதக் கதிரை, முட்டை பிடித்தல், கிடுகு பின்னுதல்,கயிறு இழுத்தல் உள்ளிட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமான போட்டிகள் நடைபெற்று பரிசில் பொருட்களும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக படைத தரப்பு அறிவித்துள்ளது. (2-281)

## சிம்பாப்வேயில் இடாய் புயல்; உயிரிழப்பு 300 ஆக அதிகரிப்பு

தெற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாப்வேயில் வீசிவரும் இடாய் புயலின் பயங்கரத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது.

அருகருகே உள்ள மூன்று தெற்கு ஆபிரிக்க நாடுகளில் 1.5 மில்லியன் மக்கள் இடாய் புயலில் சிக்கி கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக ஐ.நா. மற்றும் அரசு உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மாநில அமைச்சர் ஜூலி மாயோ பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், "அரசு கணக்குப்படி புயலில் பலியானோர் எண்ணிக்கை 100ஆக இருந்தது. ஆனால் தற்போது வரும் செய்திகளின்படி பார்க்கையில் அதன் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது. உரிய தகவல்கள் கிடைத்த பிறகு கூடிய விரைவில் இது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். (7)

## சத்திய தரிசனம்

### இறைவனிடம் ஒப்படையுங்கள்



❖ ஆணவத்தை கைவிடுங்கள். எல்லாமே இறைவன் தந்தது என்ற எண்ணத்துடன் செயறபட்டால் அவனை நெருங்குவது சுலபம்.

❖ கடுமையான வேலைகளில் ஈடுபடும் போது மனம் வேறு எதையும் நினைக்காது. அந்த வேலை இறைவனுக்காகவும், பக்தர்களுக்காகவும் என்று அமைந்தால் இன்னும் உயர்ந்ததாகிவிடும்.

❖ எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் சத்திய சோதனையை கடைப்பிடியுங்கள், வாழ்க்கையில் அமைதியும், சௌபாக்கியமும் வந்தடையும்.

❖ சுகம் வந்தால் இறைவனை மறந்தும், துக்கம் வந்தால் மட்டும் தன்னைச் சிந்தித்துப் பார்ப்பது பற்றியும் இறைவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான். இன்பம் துன்பம் எதுவந்தாலும் அதை இறைவனுக்கு என்று அர்ப்பணியுங்கள்.

❖ கஷ்டகாலத்தில் கடவுள் வரவில்லையே என்ற கவலை வேண்டாம் பக்தர்களுக்கு அருள வேண்டிய சந்தர்ப்பமும் நேரமும் வரும்போது அவன் தானாகவே வெளிப்படுவான்.

❖ நம்முடைய வாழ்க்கையில் பகவான் லீலை புரிவதும் நமக்குப் புரியக் கூடிய மனித வடிவத்திலேயே அமைகிறது.

# வலய மட்ட உதைபந்தாட்டம்

## மானிப்பாய் இந்து சிறப்பாட்டம்







மானிப்பாய் இந்துக் கல்லூரி வலய மட்ட உதை பந்தாட்ட அணி உதைபந்தாட்ட போட்டியில் இரண்டு அணிகள் இரண்டாம் இடத்தினையும் ஒரு அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 16 வயதுக்குட்பட்ட பிரிவின் உதைபந்தாட்ட அணி கால் இறுதி ஆட்டமாக மகாஜனக் கல்லூரியுடன் எதிர்த்தாடினார்கள். இந்தப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 02-01 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு அரை இறுதிச் சுற்றுக்கு தெரிவானது.

தொடர்ந்து அரையிறுதிப் போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர்த்தாடியது. இரு அணியினரும் சம பலத்தில் காணப்பட்டதால் 01-01 என்ற கோல்கணக்கில் போட்டி முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக தண்ட உதை வழங்கப்பட்டது. தண்ட உதையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி தோல்வியடைந்தது.

பின்னர் மூன்றாம் இடத்துக்கான தெரிவுப் போட்டி இடம் பெற்றது. போட்டியில் ஸ்கந்த வரோதயா கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்து அணி ஆடியது.

போட்டி முடிவில் 02-01என்ற கோல்கணக்கில் ஸ்கந்தவரோதயா கல்லூரியை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி கொண்டு மூனறாம் இடத்தினைத்தட்டிக் கொண்டது. 18 வயதுப் பிரிவு அணி ஆரம்ப ஆட்டமாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்தாடி போட்டி சமநிலையில் முடிவுற்றது. பின்னர் தண்ட உதை மூலமாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு கால் இறுதிக்கு தெரிவானார்கள். தொடர்ந்து கால் இறுதி ஆட்டத்தில் அருணோதயக் கல்லூரியை எதிர்கொண்டு 03-0 என்ற கோல்கணக்கில் மானிப்பாய் இந்து அணி வெற்றி பெற்று அரை இறுதிச் சுற்றுக்கு தெரிவானார்கள். அரை இறுதிச் சுற்றில் மகா ஜனக் கல்லூரியை எதிர் கொண்டு 01-0 என்ற கோல் கணக்கில் அவ் அணியை மானிப்பாய் இந் துக்கல்லூரி அணி வென்று இறுதிச் சுற்றுக்கு தெரிவானது.

இறுதியில் இளவாலை கெனரியரசர் கல்லூரி அணி யிடம் தோல்வியை சந்தித்தது மானிப்பாய் இந்துக் கல்லூரி. அதனடிப்படை யில் 0-03 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. இரண்டாம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது. அடுத்து மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 20 வயதுப் பிரிவின் உதைபந்தாட்ட அணி அரையிறுதி ஆட்டத்தில் மகாஜன கல்லூரியை எதிர்த்தாடியது. இரண்டு அணிகளும் சமநிலையில் காணப்பட்டதால் வெற்றியைத் தீர்மானிக்க தண்ட உதை வழங்கப்பட்டது.

தண்ட உதை மூலம் மகாஜன கல்லூரி அணியை வென்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகி வயாவிளான் மத்திய கல்லூரி அணி யுடன் மோதியது. வயாவிளான் மத்திய கல்லூரி அணியினர் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கு ஒரு கோலைப் போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொள்ள மானிப்பாய் இந்துக் கல்லூரி 0-01 என்ற கோல்கணக்கில் தோல்வியைக் கண்டு இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (க-64)

# யாழ்.வலய மட்ட எல்லே போட்டி; வாதரவத்தை விக்னேஸ்வர சம்பியன்



முதலாம் இடம் பெற்ற பெண்கள் அணி



இரண்டாம் இடம் பெற்ற ஆண்கள் அணி

யாழ்.வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண்கள் பிரிவினருக்கான எல்லேபோட்டி கடந்த 18 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெண்கள் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அணியினர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியினரை எதிர் கொண்டனர்.முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் அணியினர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அணியின் அபாரமான களத்தடுப்பினால் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

இரண்டு ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வாதரவத்தை விக்னேஸ்வர அணியினர் பலத்த போராட்டத்தின் மத்தியில் க. ஜனோபா மற்றும் சு. தீபிகா ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் வெற்றி இலக்கை அடைந்து வலய மட்டச் சம்பியனாகினர்.

ஆண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அணி சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வர வித்தியாலய அணி 3 ஓட்டங்களைப் பெற்று கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மூன்று ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டதால் போட்டி சமனிலையானது. சமநிலை தவிர்ப்புக்காக கொடுக்கப்பட்ட 10 பந்துகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஒரு ஓட்டத்தை பெற்றுக்கொள்ள பதிலளித்த விக்னேஸ்வர வித்தியாலய அணியினர் குறித்த இலக்கை அடையமுடியாமல் இறுதிப்போட்டியில் தோல்வியடைய சென். பற்றிக்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (க-60)




# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்; சென்றலைட்ஸ் அணி முன்னிலையில்

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 10 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2019 தொடக்கம் 31.01.2019 வரை நடைபெற்ற 2 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 1 போட்டியில் பங்கு பற்றி அப் போட்டியில் வெற்றிபெற்று 5.15 புள்ளிகளை பெற்று 1 ஆம் இடத்திலும், ரி.சி.சி. அணி 1 போட்டியில் பங்குபற்றி அப் போட்டியில் வெற்றி பெற்று 4.96 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும், கே.சி.சி.சி அணி 1 போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் தோல்வியடைந்து 2.29 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும், ஒல்ட்கோல்ஸ் அணி 1 போட்டியில் பங்குபற்றி அப் போட்டியில் தோல்வியடைந்து 1.25 புள்ளிகளை பெற்று 4 ஆம் இடத்திலும் உள்ளன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதை இலங்கை இனியும் தாமதப்படுத்தக்கூடாது

## ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்து

**(ஜெனிவா)**

**இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் செயன் முறையை இனியும் தாமதப்படுத்தக்கூடாது என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசலெட் அம்மையார் கோடிட்டுக் காட்டியுள்ளார்.**

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பான தனது அவதானிப்புகள் தொடர்பில் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசலெட் அம்மையார் தனது இறுதி பரிந்துரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பொறுப்புக்கூறல் செயன்முறையுடன் தொடர்புடைய குழுக்களை தாமதமின்றி அமைக்கவேண்டும்.

நிலைமாறுகால நீதிச் செயன் முறையை முன்னெடுப்பது என்பது பலதசாத்தங்களைக் கொண்டது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை இலங்கை மேலும் தாமதப்படுத்தக்கூடாது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்தார். (ம-3)

# இலங்கை அரசாங்கம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி

(ஜெனிவா)

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாமல் உள்ளமை தொடர்பாக அதிக கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள்பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்று தமது உத்தியோகப்பூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் சமர்ப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து உறுப்பு நாடுகள், குறித்த அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்தன. இதன் போது ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக் காட்டினார்.

நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை பாராட்டிய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி, பாதிக்கப்பட்டோர் தொடர்பாக நிலையான மற்றும் துரித செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வது அவசியமென வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நிலைமாறுகால நீதிபொறி முறையை தாமதமின்றி செயற்படுத்த வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி குறிப்பிட்டார். இவை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படுவது அவசியமெனவும் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இவ்விடயங்கள் செயற்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே சர்வதேச நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்படுமென இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

# பாதிக்கப்பட்ட தரப்பிற்கு இழப்பீடு வழங்க வேண்டும்

## பாகிஸ்தான் வலியுறுத்து

(ஜெனிவா)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு இழப்பீடு வழங்குவது குறித்து அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்று தமது உத்தியோகப்பூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள், குறித்த அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்தன. இதன் போதே பாகிஸ்தான் பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்திற்கு பின்னர் இலங்கை பல காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். யுத்தத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த பொது மக்களின் காணிகள் விடுவிக்கப் பட்டுள்ளமையினை பாகிஸ்தான் பிரதிநிதி இதன் போது வரவேற்றுள்ளார்.

அத்துடன், தீர்வுகாணப்படாத பல பிரச்சினைகள் உள்ளதாகவும், அவை குறித்து ஆராய்ந்து தீர்வு பெற்றுக்கொடுப்பது அவசியமானது எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (ம-3)

# இராணுவத்...

அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயாரித்த அறிக்கையை, அதன் ஆணையாளர் மிச்செல் பாச்லெட் நேற்று புதன்கிழமை சமர்ப்பித்தார்.

அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனிதாபிமான உரிமை மீறல்கள் ஆகியவற்றை பாரதூரமான முறையில் மீறியதாக குற்றம்சாட்டப்படும் சவேந்திர சில்வாவிற்கு இலங்கை இராணுவத்தில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளமை குறித்து சுட்டிக்காட்டியுள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்லெட், இது கவலைதரும் விடயம் என தெரிவித்துள்ளார்.

வடக்குகிழக்கில் இராணுவத்தினரின் பிடியிலுள்ள பொதுமக்களின் நிலங்களை விடுவிப்பதில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர், இந்த முக்கியமான நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்காக மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மனித உரிமைகளை பாதுகாக்க இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.நா வில் டென்மார்க் வலியுறுத்து

(ஜெனிவா)

மனித உரிமையை பாதுகாத்தல் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என டென்மார்க் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்று தமது உத்தியோகபூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள், குறித்த அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்தன. இதன் போதே டென்மார்க் பிரதிநிதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

30/1 பிரேரணையை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஒன்றினை தயாரித்து முன்வைப்பது அவசியமானது எனவும் டென்மார்க் பிரிதிநிதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், யுத்த காலத்தில் பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பாலியல் அத்துமீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் டென்மார்க் வலியுறுத்தியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் டென்மார்க் அரசாங்கம் இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. (ம-3)

# நீதிப்பொறிமுறையில் இலங்கை முன்னேற்றமில்லை

## ஐ.நா ஆணையாளர் கவலை

(ஜெனிவா)

குற்றங்களை கையாள்வது தொடர்பான இலங்கையின் நீதிப் பொறிமுறையில் முன்னேற்றம் இல்லை என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயாரித்த அறிக்கையை, அதன் ஆணையாளர் மிச்செல் பாச்லெட் நேற்று புதன்கிழமை சமர்ப்பித்தார்.

அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் அமைப்பது அவசியமானது எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20-03-2019
சீட்டிழுப்பு இலக்கம் 927
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 1 6 4 4 5 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 359
வெற்றி எழுத்து S
சுப்பர் இலக்க 07
வெற்றி இலக்கங்கள் 03 27 48 50

தன நிதானய
திகதி 2019-03-20
சீட்டிழுப்பு இலக்கம் 129
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 14 35 43 75
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 2069
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 19 31 41 78
தேசிய லொத்தர் சபை

## அரசியலமை...

சமர்ப்பிக்கப்பட்டது.

ஐ.நா. பிரேரணையை நடைமுறைப் படுத்தாமை, நல்லிணக்க பொறிமுறை தாமதிக்கப்படுகின்றமை, நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை செயற்படுத்தாமை தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் மிச்செல் பாச்லெட் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

குறித்த அறிக்கையை தொடர்ந்து உரையாற்றியபோதே இந்தியா இதனை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை தமது நட்புநாடு என்றவகையில் சகல விடயங்களிலும் இந்தியா துணை நிற்கும், குறிப்பாக தேசிய ஒற்றுமை, மனித உரிமை போன்ற விடயங்களில் அதிக கரிசனை கொண்டுள்ளதாக இந்தியா தெரிவித்தது. அத்தோடு, இலங்கையின் தமிழ் சமூகம் தொடர்பாக கரிசனையுடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்றம் நல்லிணக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக நிலையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம் எனவும் இந்தியா குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## மனித உரிமைகள்...

இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயாரித்த அறிக்கையை, அதன் ஆணையாளர் மிச்செல் பாச்லெட் நேற்று புதன்கிழமை சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றியபோதே இவ்விடயத்தை சுட்டிக்காட்டினார்.

மூன்று தசாப்தகால யுத்தத்தை சந்தித்த இலங்கை தற்போது நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்கின்றது. இவ்வாறான நிலையில் மரண தண்டனையை மீண்டும் செயற்படுத்த முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஐ.நா. ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

நியூசிலாந்து வேலைவாய்ப்பு
மேசன் - ரைல் பொருத்துநர் - பிளம்பர் - காப்பென்ரர்
மெக்கானிக் - மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
படகு கட்டுமான பணியாளர் - வனவள பணியாளர்கள்
அலுமினியம் பிற்றர் - தொழிற்சாலை மின்னியலாளர்
(C-5834)
5 வருட தொழில் அனுபவம் - வயதெல்லை 46
அடிப்படை ஆங்கில தொடர்பாடல் திறன் அவசியமானது
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 2219 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-5896)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை



## தலை...

துள்ளது.

நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவ்வாறு கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது ஐந்து மூடைகளிலிருந்து கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(8061)





யப்பான் சயிக்கிள்
விலை 12,500 /= லிருந்து
01. லேடிஸ் சையிக்கிள்கள்
02. ஜென்ஸ் சையிக்கிள்கள்
03. கியர் சையிக்கிள்கள்
04. மடக்கும் சைக்கிள்கள்
05. Belt சைக்கிள்கள்
06. பாரம் ஏற்றும் சைக்கிள்
07. டிவரஞ்சர் சைக்கிள்கள்
08. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை
நீண்டகாலப்பாவனை (10 வருடம்)
அன்ரன் என்ரபிறைசஸ்
பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)
(C-5831)



## இலங்கையில்...

நிராகரித்துள்ளது.

நிலைமாறுகால நீதிச் செயன்முறைகளை முன்னெடுப்பதில் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் நாட்டில் அமைப்பதை இலங்கை நம்பிக்கை கொள்ளவில்லை என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பான தனது அவதானிப்புகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட் அம்மையார் நேற்று முன்வைத்த தனது அறிக்கையை முன்வைத்து உரையாற்றினார்.

இலங்கையின் பொறுப்புக் கூறல் செயன்முறையை கண்காணிக்கவும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் நிரந்தர அலுவலகம் ஒன்றை சுயாதீன அதிகாரங்களுடன் அமைக்க வேண்டும் என்று ஆணையாளர் தனது அறிக்கையில் பரிந்துரைத்திருந்தார். இந்த பரிந்துரையையே இலங்கை நிராகரித்துள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறல் நீதிப்பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றை அமைக்க அனுமதிக்க முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் உறுதியாகத் தெரிவித்தார்.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் குடியுரிமையில்லாதவரை நீதிபதியாக நியமிக்க முடியாது.

வெளிநாட்டவரை நீதிபதியாக நியமிக்கவேண்டுமாயின் பாராளுமன்றில் அரசியலமைப்புத் திருத்தத்தை முன்வைத்து மூன்றில் இரண்டு ஆதரவுடன் நிறைவேற்ற வேண்டும். அத்துடன், அந்த தீர்மானத்தை மக்களிடம் முன்வைத்து பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற இலங்கை தயாரில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பதிலளித்தார். (ம-3)

## போர்க்குற்றங்கள்...

பொறுப்புக்கூறல் விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உரையைத் தொடர்ந்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உரையாற்றினார். இதன்போதே அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

இலங்கைப் போரில் இராணுவத்தினர் போர்க்குற்றங்களை இழைக்கவில்லை. ஐ.நா. நிபுணர்கள் குழுவின் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டவாறு இறுதிப் போரில் பெருந்தொகையான மக்கள் கொல்லப்படவில்லை.

அத்துடன், இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பில் உள்ளக நீதி விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படும். அதில் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரிடமிருக்கும் காணிகள் பெருமளவில் விடுவிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பான சட்டவரைவு அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. காணாமற்போனார் அலுவலகம் மேலும் விரிவாக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். (ம-3)

## சாரதி மீது...

சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அந்தக் கும்பல் அவரது காரின் கமராவையும் அபகரித்துத் தப்பித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த குணசிங்கம் ரஜீவ்குமார் என்பவரே படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாண நகரில் கார் ஓட்டுநராக இருக்கும் அவர் பயணிகளை ஏற்றிக் கொண்டு வேம்படி வீதியால் நேற்று நண்பகல் பயணித்துக் கொண்டிருந்த போது 5 மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று கார் சாரதியை வெட்டி காயப்படுத்திவிட்டு தப்பி சென்றுள்ளது.

படுகாயமடைந்த சாரதியை அப்பகுதியில் நின்றவர்கள் மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர். அத்துடன், தாக்குதலாளிகள் கார் சாரதிக்கு அறிமுகமானவர்கள் எனவும் அவர்கள் யாழ்ப்பாணப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,10)

## படகிலிருந்து தவறிவிழுந்த...

தேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த 19 வயதுடைய அன்ரனி டினேஸ் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்துள்ள இளைஞனுக்கு நாளை 19ஆவது பிறந்ததினம் கொண்டாடவுள்ள நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளமை அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சிறுபான்மையினருக்கு...

கடந்த கால வன்முறைகளுடன் தொடர்புடையவர்களை தண்டனையிலிருந்து விடுவிப்பதானது சிறுபான்மையின மக்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வன்முறைகள் இடம்பெறும் சாத்தியப்பாடுகளை அதிகரிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பான தனது அவதானிப்புகள் தொடர்பில் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசலெட் அம்மையார் உரையாற்றினார். இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை வினைத்திறனான விசாரணை அவசியமாகும்.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன. ஐ.நா. சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்தார். (ம-3)

## குறிப்பிட்ட கால அட்டவணை...

கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இவ்வாறு கால அட்டவணையின் கீழான பொறுப்புக்கூறல் பொறிமுறையையே வலியுறுத்தின.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்றையதினம் இலங்கை மீதான அறிக்கை மனித உரிமை ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் விவாதம் நடைபெற்றது.

இதில் ஐரோப்பிய ஒன்றியம், டென்மார்க், நோர்வே, பெல்ஜியம், பிரிட்டன் மற்றும் ஜேர்மனி உட்பட பல நாடுகள் இலங்கை குறித்து உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அறிக்கையை ஏற்க...

டத் தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் ஐ.நா. பிரேரணையை நடைமுறைப்படுத்தாமை, நல்லிணக்க பொறிமுறை தாமதிக்கப்படுகின்றமை, நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை செயற்படுத்தாமை தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த அறிக்கைக்கு இலங்கை சார்பில் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, குறித்த அறிக்கையில் உள்ள சகல விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதென கூறியுள்ளார்.

ஐ.நா. பிரேரணையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த கடந்த 2017ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கம் கரிசனையுடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட திலக் மாரப்பன, காணாமல் போனோர் அலுவலகம் செயற்பட்டு வருகின்றமை தொடர்பாக இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை செயற்படுத்துவது தொடர்பாக காத்திரமான விடயங்களை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றீடான சட்டத்தை கொண்டுவருவது தொடர்பான செயற்பாடுகள் பாராளுமன்றில் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக இவ்வருட வரவு செலவு திட்டத்தில் விசேட தேவையுடையவர்களுக்காக 500 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

மன்னார் மனித புதைகுழி தொடர்பாக இதன்போது கருத்து வெளியிட்ட திலக் மாரப்பன, பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இலங்கை காணப்பட்டிருந்த நிலையில் இவ்வாறான புதைகுழிகள் இனிவரும் காலத்திலும் கண்டுபிடிக்கப்படலாம்.

ஆனால் அதனை வேறு விதமாக சித்தரிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் மேலும் தெரிவித்தார்.

கலப்பு நீதிமன்ற பொறி முறைக்காக வெளிநாட்டு பிரஜைகளை உள்வாங்க இலங்கை அரசியலமைப்பில் இடமில்லையென சுட்டிக்காட்டினார். அவ்வாறாயின் இலங்கை அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டார். (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.